கும்பகோணம்

# மஹாமஹ மஹாத்ம்யம்



...சாமி முதலியார் அண்டு சன்
4, டேவிட்சன் தெரு
மதராஸ்
1921

2091

இதன் விலை] பிப்ரவரி 22உ [அணா 4

சென்னை, ஜூபிடர் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

சிவமயம்
TIRUPPUVANA MADAM

கும்பகோணம்

# மஹாமகம்
# மஹாத்ம்யம்




கா. முனிசாமி முதலியார் அண்டு சன்
14, டேவிட்சன் தெரு
மதராஸ்
1921

இதன் விலை] பிப்ரவரி 22௳ [அணா 4

திருப்பூவண மடம்
௨
சிவமயம்
TIRUPPOOVANA MADAM.

௨

சிவமயம்



மாமாங்கமென்று வழங்கும்


# மஹாமஹமஹாத்ம்யம்

முனிவர்களே, பன்னிரண்டு வருஷங்களுக் கொருதரம்
கும்பகோண க்ஷேத்திரத்திலே நடக்கும் திருவிழாவின்
கடைசிதினத்தில் தீர்த்தமாடுந்தினம் மகாமகமென்று சொல
லப்படும். அந்தத்தினத்தில் ஹிமசேதுவரையிலுள்ள எல
லாத்தேசத்தினரும் ஒன்று கூடி இந்தஸ்தலத்தில் தென
கீழ்த்திசையிலுள்ள தடாகத்தில் ஸ்நானஞ்செய்வர். அந்தத்
தீர்த்தம் தன்னிடத்தில் அமுதமுடைய காரணத்தால் (1)
அமுததீர்த்தமென்றும், எல்லாத்தீர்த்தங்களும் ஒருவருஷத்
திற்குமுன்னமே அங்கேவந்து அந்தத்தீர்த்தத்தில் சேருங்கா
லத்தால் (2) பகுத தீர்த்தமென்றும், தேவகுருவாகிய பிர
கஸ்பதி முனிவர் சிங்கராசியிற்கூடி அந்தச்சிங்கத்திற்குரியவ
ஞன சூரியன் தன்மகன் சனிவீட்டுள் ஏழாமிடமாகிய கும்
பத்தைச் சார்ந்து நின்று பௌர்ணமி கூடிய மகநக்ஷத்திரத்
தில் சந்திரன்வந்து சிங்கத்தில் குருவுடன்கூட அவ்விருவ
ரையும் சூரியனும், சூரியனை அவ்விருவரும் முழுப்பார்வை
யுடன் பார்க்கிறதினத்தில் நீராடுவதும், இத்தீர்த்தம் கணக்

திருப்பூவண மடம்
உ
சிவமயம்
TIRUPPOOVANA MADAM.

உ

சிவமயம்



மாமாங்கமென்று வழங்கும்

# மஹாமஹாமஹாத்மியம்

முனிவர்களே, பன்னிரண்டு வருஷங்களுக் கொருதரம் கும்பகோண க்ஷேத்திரத்திலே நடக்கும் திருவிழாவின் கடைசிதினத்தில் தீர்த்தமாடும்தினம் மகாமகமென்று சொல்லப்படும். அந்தத்தினத்தில் ஹிமஸேதுவரையிலுள்ள எல்லாத்தேசத்தினரும் ஒன்று கூடி இந்தஸ்தலத்தில் தென்கீழ்த்திசையிலுள்ள தடாகத்தில் ஸ்நானஞ்செய்வர். அந்தத் தீர்த்தம் தன்னிடத்தில் அமுதமுடைய காரணத்தால் (1) அமுததீர்த்தமென்றும், எல்லாத்தீர்த்தங்களும் ஒருவருஷத்திற்குமுன்னமே அங்கேவந்து அந்தத்தீர்த்தத்தில் சேருங்காலத்தால் (2) பகுத தீர்த்தமென்றும், தேவகுருவாகிய பிரகஸ்பதி முனிவர் சிங்கராசியிற்கூடி அந்தச்சிங்கத்திற்குரியவனை சூரியன் தன்மகன் சனிவீட்டுள் ஏழாமிடமாகிய கும்பத்தைச் சார்ந்து நின்று பௌர்ணமி கூடிய மகநக்ஷத்திரத்தில் சந்திரன்வந்து சிங்கத்தில் குருவுடன்கூட அவ்விருவரையிம் சூரியனும், சூரியனை அவ்விருவரும் முழுப்பார்வையுடன் பார்க்கிறதினத்தில் நீராடுவதும், இத்தீர்த்தம் கன்னிக்

கில்லாமல் எல்லாப்புராணங்களிலும் கொண்டாடப்படுவதாய் (3) மகாமகதீர்த்தமென்றும் இதுபோலப்பல திருநாமங்களை யுடையது. இத்தீர்த்தம் தன்னிடத்தில் மூழ்குவோரைப் புனிதமாக்குவதாயினும் மகாமகநாளில் மூழ்குவோருக்கு விசேஷபலனைத் தரத்தக்கது. (அது அந்நாளில் சிறப்புங்கூடி நிற்றலாலெனவும் கொள்க) இந்த மகாமகம் பிரபவமுதல் அக்ஷய இறுதியாகவுள்ள வருஷங்கள் அறுபதில், சிங்கராசியில் வந்த குரு சுற்றிவந்து ஒவ்வொருவருஷம் ஒவ்வொரு ராசியிலிருந்து திரும்பியும் அச்சிங்கராசிக்கு வந்துசேர பொதுவாய்ப் பன்னிரண்டு வருஷங்கள் செல்லுதலின் பவ, விய, விளம்பி, சாதாரண, துந்துபி வருஷங்களில் வரவேண்டு மென்றும் குருவின் அதிசாரத்தாலும் வக்கிரத்தாலும் முன் சொன்ன வருஷங்களுக்கு ஒருவருஷம் முற்பட்டாவது பிற் பட்டாவது ஏகதேசம் வருவதுமுண்டு.

இம்மகாமக முழுக்கு ஒருநாள் முழுககாகக் கொண்டா டினும் அது நான்கு தினங்கள் அனுசரிக்கவேண்டிய ஒரு விரதமாக இருக்கிறது. இதுபோல்வடதேசத்திலும் அனுஷ் டிக்கும் இடங்களிருப்பினும்இம்மகாமக தீர்த்தத்தைப்போல அவ்வளவு சிறப்புடையதாகக் காணப்படவில்லை.

முனிவர்களே! நீங்கள்கேட்ட மகாமகமகத்துவம் இந்த ஸ்தலத்திற்குக் கும்பகோணமென்று பெயரிட்ட ஹேதுவும், கும்பகோணத்தைச்சார்ந்த பஞ்சக்ரோச க்ஷேத்ரயாத்திரை யும், (அஷ்டாதச) பதினெட்டு ஸ்தலயாத்திரை வைபவமும், மகாமகதீர்த்தமகத்துவமும், மகாமகவிரதப்பிரபாவமும், நவ கன்னியர் அர்ச்சனையும், அவ்விடத்திற் செய்யவேண்டிய தானங்களும், அவற்றால் வரும் பிரயோசனமும் பூர்வத்தில் அதில் மூழ்கி இஷ்டசித்திகளை யடைந்தோர் சரித்திரங்க ளும், முறையோ கும்பகோண மஹாத்மியத்திற் கூறியவை யைசொல்லுகிறேன் கேளுங்கள்.

பூர்வகாலத்தில் நேரிட்ட மகாப்பிரளயம் சம்பவித்ததை யும் அதனால் உலகத்தில் ஜீவராசிகளெல்லாம் அழியவேண்

டியதையும் அறிந்த பிரம்மதேவன் அவற்றை மறுபடியும் சிருஷ்டிக்க மார்க்கம் தெரியாமல் சிவபெருமானிடம் சென்று மீண்டு உலகத்தைப் படைக்க உபாயமும் உபதேசித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, சிவபெருமான் அமுதம் விட்டுப்பிசைந்த மண்ணால் ஒரு கலசம் செய்து அதில் அமுதம் விட்டு ஒருவகைத்தோற்றம் நால்வகை பீஜமும் உடைய எல்லாஜீவன்களையும் தன்னுள் அடக்கிய விதையாகிய சிருஷ்டிப்பீஜத்தைப் புதைத்து வேதாகம புராண இதிகாசாதிகளைச் சுற்றிலும் வைத்து அமுதம் சொரிந்து மகமேருகிரியின் தென்திசையில் ஓரிடத்தில் ஒரு உறியில் வைத்துவிடும் என்று உபதேசித்தருளினார். பிரமதேவனும் அப்படியே செய்து அக்கலசத்திற்கு நாலசுற்றி மாவிலை செருகி அதன் மேல் தேங்காயை வைத்துப்பூணூலும் தர்ப்பையும் சாத்தி சந்தனபுஷ்பாதிகளால் பூஜித்து மேருவின் தென் திசையில் ஓர் உறிசெய்து வைத்தனன். சிறிதுகாலத்தில் மகாப்பிரளயம் உண்டாகி அச்சராசரங்களை எல்லாம் அழித்து மேருமலையையும் முழுகச்செய்தது. அப்பொழுது மேருமலையில் பிரமதேவனை வைத்துக் கும்பம் தர்ப்பை பூணூல் தேங்காய் மாவிலை வில்வம் உறி முதலியவற்றுடன் ஜலத்தில் மிதந்து தென்திசைசென்று காற்றினால் மேற்கே திரும்புகையில் அதன்மேலிருந்த தர்ப்பையும் மாவிலையும் ஓர் இடத்தில்விழ அங்கே மாவிலையே வன்னிமரமாகவும் அம்மரத்தின்கீழ் தர்ப்பையேலிங்கமாகவும்தோன்றிஅவ்விடம் திருப்பிரம்பியமென்றும் அவ்விலிங்கம் தர்ப்பைலிங்கம் என்றும்பெயர்பெற்றது. இந்தலிங்கத்தைக் கன்னியர் எழுவரும் ஜலரூபமாய்ச்சூழ்ந்திருந்தார்கள். கும்பமோ அந்தஸ்தலத்திற்கு வடகீழ்திசையில் ஒன்றரை குரோச தூரத்தில்லோக கடவுள் அனுக்கிரகத்தால் இது மகா க்ஷேத்திரமென்று அசரீரி உண்டாகிய தேவர்கள் மலர்மாரிசொரிய வெள்ளமும் குறையக் கெடமும் அவ்விடத்திலேயே தங்கியது. அக்கும்பத்தைத் தொடர்ந்து சென்ற பிரமாஇவற்றையெல்லாம் கண்டு ஆச்சரியப்பட்டார். பூமியில் தங்கிய கலசம் இருந்த உறிகலசத்திற்குச் சிறிது

கீழ்த்திசையில் விழுந்தது. அது சோமிநாதர் கோவில் என
படும். கலசத்தின்மேலிருந்த தேங்காய் அக்கினிமூலையாக
போய்ப்பூமியிற் புதைந்து செவ்விள நீர்மரமாகி அதனடியி
அக்காயில் குடுமிவடிவமாக ஓர் சிவலிங்கமாகி நாரிகேளே
வரர் என்று பெயர்பெற்றது. இவரை அமுதநாதர் என்று
கூறுவர். சிக்கம் விழுந்தஇடத்திற்குக்கிழக்கே வில்வம் விழு
ந்து வில்வவனமாகிப் பாதாளலிங்கமென்று பெயர்பெற்றது
இது நாகேஸ்வரன்கோவில் என்றுஞ்சொல்லப்படும். அமு
நாதருக்கு மேற்கே பூணூல் விழுந்துலிங்கமாகி உபவீதலி
கம் என்று பெயர் பெற்றது. இதுகௌதமேஸ்வரர் கோவி
எனப்படும். இப்படிப் பலக்ஷேத்திரங்கள் உண்டாவதற்கு
கும்பமே காரணமாதலின் அக்கும்பம் க்ஷேத்திரபீஜக் கும்
மென்று காரணப்பெயர் பெற்றது.

சிவபெருமான்அக்கும்பத்தைப் பார்க்கவிரும்பிஓர்வே
உருவம் தாங்கித்தனதுப்பரிஜனங்களுடன் பல இடங்களை
பார்த்துக்கொண்டு திருவிடைமருதூருக்குக் கீழ்ப்பக்கத்தி
வந்து மேற்றிசையைப் பார்க்க அக்கும்பம் தெரிந்தது
தனதுபாணங்களில் சிலவற்றை வேடிக்கையாக விட அவை
அக்கும்பத்தின் சமீபத்தில் ஒழிந்தன. உடன் வந்த ஐயன
ஒருபாணத்தை எடுத்துக்கொடுக்க, பரமசிவன் அதுவாங்
ஐயா இந்த அம்பினால் அந்தக்கும்பம் உடையாது, அதை
காணஎன்றுசொல்லி அவ்வம்பைவில்லில்தானே நாணேற்றி
பிரயோகிக்க அது கும்பத்தைத்தீங்குசெய்யாமல் ஒழிந்தது
அதைப்பார்த்து வருத்தப்பட்ட சாத்தனாரை வேடனுரு
கொண்டபரமசிவன்தேற்றிநீஏகபாணசாத்தனார் பெயர் பெ
றுப்பாணவண்துறைஎன்னும் இவ்விடத்தில்இருஎன்றுவர
கொடுத்து நிறுத்தித்தன் அம்பறாத்தோணியிலிருந்து ஒ
அம்பை எடுத்து மேற்கே கொஞ்சதூரம் சென்று அக்கு
பத்துக்கு வடகீழ்த்திசையினருகு அந்தப்பாணத்தைப் பி
யோகிக்க அதலைந்துபோய் அக்கும்பத்தின் மூக்கை
உடைத்துக்கும்பத்தையும் கவிழ்த்தது. உடைந்த மூக்குஆ
யமார்க்கமாய்ச்சென்று அக்கினிமூலையிற் கொஞ்சதூரத்தி

விழுந்து ஒருலிங்கமாயிற்று. அந்த இடத்திற்குக்குடவாயில் என்றும் அந்த லிங்கத்திற்குக் கோணேசர் என்றும் பெயர் வந்தன. வேடரூபமாக இருந்தஇடம் இடபாணபுரி என்றும் அவ்விலிங்கம் பாணபுரியீச லிங்கமென்றும் பெயர்பெற்றன.

உடைந்த மூக்கின் வழியாய்க் கும்பலிலிருந்த அமுதம் சிந்திச் சுற்றிலும் பரவி யோசனை தூரம் நனைத்தது. அமுதம் வருகிறவழியே பரமசிவன்சென்று கும்பத்தைச் சமீபித்து அதற்குக் கிழக்கே அருகாமையிலும் தென் கிழக்கே கொஞ்ச தூரத்திலும் அமுதம் நிற்பதற்குப் பூமி இடங்கொடுக்க வேண்டுமெண்டு நினைக்கப் பூமி வெடித்து அவ்வாறே இடம்கொடுக்கப் பொற்றாமரைத் தீர்த்தமும், மகாமகதீர்த்தமும் என்று இரண்டு அமுதவாவிகள் தோன்றின. பிறகு சிவபெருமான் குடத்தைச் சமீபித்தார். அப்பொழுது தண்ணீர்வடிந்து தரைதெரிந்தது.அமுதத்தால்நனைந்தமண்ணைச் சேர்த்துப்பிடித்து ஓர்லிங்கம் செய்து அவ்வுடைந்த குடமூக்கில்வைத்துத் தாமே பிர்மன் முதலிய சகலபேர்களும் பார்க்க அவ்விலங்கத்து அந்தர்த்தானமாயினர்.

தேவர்களெல்லாம் உலகத்திற்கு மங்களம் உண்டாகக் கருதிக் கயிலாயத்திலிருந்த உமாதேவியாரை அந்தலிங்கத்திற்கு வாமபாகத்தில் அமைத்து மங்களாம்பிகை என்று அழைத்தார்கள்.

இவை எல்லாம் மாசிமாதத்திலே நடந்தன. பிரமா, கும்பேஸ்வரருக்கும், மங்களாம்பிகைக்கும் ஆலயம் கட்டி உற்சவம் செய்து வருகையில் பத்தாம்நாள் அமுததீர்த்தத்தில் ஸ்நானம்செய்து மகாமகதீர்த்தத்தில் சுவாமியைத் தீர்த்தம் கொடுக்கச்செய்தான்.

இவ்விதமாக ஒவ்வொருவருஷமும் பிரம உற்சவம் நடத்துவர். உடைந்த கும்பமூக்கின் வழியாக அமுதம் நாற்புறமும் பரவியகாரணத்தால் கும்பகோணம் என்றும் உடைந்த மூக்கின்மேல் சிவபெருமான் மண்லிங்கத்தை வைத்துப் பூஜித்ததால் கும்பகோணமென்றும் காரணப்பெயர்கள் வந்தன.

சிருஷ்டிகாலத்திலேயே முதலில் தன்கையால் உ டான காரணம் பற்றி ஆதிகும்பேசர் என்றும், அமுதம்பி பிய இடத்தில் உண்டான காரணம்பற்றி அமுதலிங்கே என்றும் பெயர் வழங்கும்.

இந்த க்ஷேத்திரம் கிரேதாயுகத்தில் மூன்றுயோசனை யும், திரேதாயுகத்தில் இரண்டு யோசனையும், துவாபரயுக தில் ஒரு யோசனையும், கலியுகத்தில் அரையோசனையும் வி ஸ்தீரணமுடையதாய் இருக்குமென்று புராணங்கள் கூறும்.

இந்த ஸ்தலத்தில் விஸ்வநாதர் - அபிமுகேசர் - கௌ மேசர் - நாகேசர் - சோமேசர் - ஆராவமுதர் - கும்பலிங்( சர் - விஸ்வேசர் - ஆதிவராகர் - நாராயணர் - வரதராஜர் நரசிம்மர் ஆகிய மூர்த்திகள் எழுந்தருளி இருக்கின்றன அவை முறையே.

1. விஸ்வநாதர் கன்னியாதீர்த்தக் கரையில் ஒன்ப கன்னியர்களோடு இருப்பர்.

2. அபிமுகேசர் கீழ்க்கரையில் மேற்றிசைநோக் இருப்பர்.

3. கௌதமேசர் மேல்கரையில் கிழக்குமுகமாய் இரு பார்.

4. பாதாளலிங்கேசர் கன்னியா தீர்த்தத்திற் வடமேற் மூலையில் வில்வவனத்தில் இருப்பார்.

5. சோமேசர் நாகேசுரருக்குவடமேற்குமூலையில் இரு பார்.

6. ஆராவமுதர் சோமேசுரருக்கு வடமேற்கு மூலையி ஏமரிஷியின் மகளைத் திருமணஞ்செய்து இருப்பார்.

7. கும்பலிங்கேசர் ஆராவமுதருக்கு நேர் மேற்கி இருப்பார்.

8. விஸவேசர் கும்பலிங்கேசுரருக்கு தென் மேற்கு திசையில் மாலதிவனத்தில் வீற்றிருப்பார்.

9. ஆதிவராகப்பெருமாள் கும்பலிங்கருக்கு வடக்கே காவிரி தென்கரையில் எழுந்தருளி இருப்பார்.

10. இலட்சுமிநாராயணர் ஆதிவராகருக்கு வடமேற்கில் காசிபருக்கு அருள்செய்து எழுந்தருளி இருப்பர்.

11. வரதராஜர் காவிரிக்கு வடக்கே மதங்கமுனிவருக்கு அருள்செய்து இருப்பர்.

12. நரசிம்மர் வரதராஜருக்குத் தெற்கே காவிரி தென் கரையில் சூரியனுக்கு அருளிய சக்கரபாணியார் இருப்பர்.

சக்கரபாணிக்கு நேர்கிழக்கில் பாணபுரீஸ்வரர் எழுந்தருளி இருப்பர் என்று புராணம் கூறுகின்றது. இவர்களை அன்றிக்காலத்தீசர் - ராமர் - வரதர் - சாரநாராயணர் - வேத நாராயணர் முதலிய பல ஆலயங்களும் இருக்கின்றன. இவை மானவை பிரதிஷ்டையாக இருக்கலாமென்று தோன்றுகின்றது.

மத்தியார்ச்சுனப் பிரபாவம்.

குடமூக்கின் கிழக்கே இரண்டு காதவ தூரத்தில் விபண்டகர் என்கிற முனி இருபத்து நான்கு சதுர்யுகங்கள் பக்திசிரத்தையாய் அர்த்தநாரீசுரனைக் காணவேண்டுமென னும் ஆசையோடு தபசுசெய்துகொண்டிருந்தார். ஈசனும் அவர் தவத்திற்கிரங்கி ஆநந்தத்தை யுடையவனாய் விருஷபாரூடனாய்ச் சகல பரிவாரங்களுடனும் அவருக்குப் பிரசன்னனாய் அவர் இஷ்டத்தைப் பூர்த்திசெய்தனன். தைமாசம் பூசநட்சத்திரப் பௌர்ணமி திதி மத்தியானம் அபஜித இலக்கினத்தில் அவருக்குப் பிரத்தியட்சமாய் அவர் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து அவரால் பூசிக்கப்பட்டு அவ்விடத்திலேயே மகாலிங்கம் எனப்பெயர் பெற்று எழுந்தருளியிருந்தனர். இந்த இடத்திலேயே காசிபஇருஷியானவர் பன்னிரண்டு வருஷம் பாலகிருஷ்ணனைக்காணவேண்டித் தவம்புரிந்து அம்மைப் பிரார்த்திக்க உமாபதி அவர்தவத்திற்கிரங்கி மனம் பூரித்து அர்ச்சுனம் என்று பெயருடைய மருத மரத்தினடியில் அவருக்குப் பிரசன்னமானான். பிரசன்னமானஹரியைக் கண்ட காசிபர் ஆனந்தத்தினால் பரவசமடைந்து பாபித்தியம் கொண்டவனைப்போலத் துதித்துப் புகழ்ந்து கூத்தாடித்

தோத்தரித்து அங்கேயே எழுந்தருளி உலகத்தாருக் அநுக்கிரகம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வ ணமே ஹரிஹரன் என்னும் இருவரும் உலகத்திற்கு உ வுண்டாகும் வண்ணம் ஓர்மரத்தின் இடைத்தோன்றின ஆனபடியால் அவ்வூருக்குத் திருவிடைமருதூர் என்று மத்தியார்ச்சுனம் என்றும் பெயருண்டாயிற்று (அர்ச்சு மருதமரம்) தைமாதம் பௌர்ணமி அபிசித் இலக்கினத்தி இந்தத்தலத்திலுள்ள காவிரியில் கலியாண தீர்த்தத்தில் ஸ் நம்செய்பவர் பிர்மஹத்தியாதி தோஷங்கள் நிவர்த்தியா முத்தியடைவார்கள்.

மேஷத்தில்சூரியன் பிரவேசிக்குங்காலத்திலே (சித்திரை மாதப்பிறப்பிலே) மகாலிங்கத்தின் சந்நிதியிலுள்ள காரு ணியாமிருத தீர்த்தத்தில் உரோமசனுக்கு ஞானம் கொடுத் தும் கருநிற காக்கை யுடலம் பானிறமாக்கியதும் வா திக்கிலுள்ள தீர்த்தத்தில் வைகாசிமாதத்தில் ஸ்நானஞ்செய் வர்கள் எவ்வித பாவத்தினின்றும் நீங்கிமுக்தர்களாகி நற்க யடைவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இத்தல கும்பகோணத்தைச்சார்ந்த பஞ்சக்குரோச க்ஷேத்திரங்க லொன்று இத்தலத்தில் மூன்று தீர்த்தங்களுடம் அவற்றி மூழ்கினோர் இஷ்டசித்தியை யடைவர்.

## 2-வது திருநாகேசுவரம்.

இந்தக் கும்பகோணத்திற்கு வடகிழக்கு மூலையில் ஒ குரோசத்தில் திருநாகேசுரம் என்றோர் தலமுளது. அதி ஆதிசேஷன் நூறுவருடம் தவஞ்செய்து நினைத்த பலனை லாமடைந்து பிறகு பதினாயிரம் வருஷம் தவம்புரிந்து நா வாவியென்ற ஓர் தடாகமியற்றி அத்தடாகக்கரையில் எழுந் ருளியிருந்த பரமசிவனுக்கு நாகநாதனெனப் பெயர்வைத்த அவ்வூரின் தடாகத்தில்மூழ்கிநாகநாதனைத் தரிசித்தவருக்கு சகலபாபமும் போகவேண்டுமென்றும்சிவசாயுச்சியமும் த வேண்டுமென்றும்பிரார்த்தித்து அவ்வாறேவரம்பெற்றனன் நாகேசனாகிய ஆதிசேடனால் பூஜித்த தலமாதலால் நாகேச்சு

மெனப்பெயர் வாய்ந்துளது. இத்தலத்தில் கார்த்திகை சோமவாரம் ஆதித்தியன்பூசித்து மூழ்கிப்பெரும்பேறுபெற் ருன். ஆதலால் அத்தீர்த்தத்திற்கு ஆதித்ய தீர்த்தமெனப் பெயருளது. அத்தீர்த்தத்தில் கார்த்திகை ஆதிவாரம் மூழ்கி நாகேசனைப் பூசிக்கவேண்டும் தருமதேவதை அங்நீராடிப் பேர்பெற்றதால் தரும தீர்த்தமென்றும் பெயர்.

கார்த்திகை சோமவாரத்தில் வாசுகிவந்து மூழ்கி முதல் யாமத்தில் நாகேசரையும், இரண்டாம் யாமத்துச்சமிதவனே ரையும், மூன்ரும்யாமத்துப் புன்னகவனேசரையும் பூசித்து நாலாம்யாமத்தில் பாதலம் புகுந்து இம்மூவரையும் நினைத் துத் துதித்து முத்திபெற்ருன். ஆகையால் இத்தலத்திற்கு நாகேசுரமெனப் பெயருண்டாயிற்று என்றும் கூறுவர்.

திருநாகேசுவரம் என்னும் தலத்திற்குத்தென் புறத்தில் அதிசமீபத்தில் ஆகாசநகரமென்று பெயருடையது மூன்று உலகங்களிலும் பிரசித்திபெற்ற துளசி வனத்தில் மார்க்கண் டேய மகரிஷியானவர் தனக்கு ஒரு பெண் மகவு வேண்டி மகாவிஷ்ணுவின் மார்பைத் தனக்கு இடமாகக்கொண்ட கம லாசனையாகிய இலக்குமியைக் குறித்துத்துதித்து ஆயிரவரு ஷம் நியமத்தோடு உவர்ப்புமுதலிய அறுசுவைகளேயும்நீக்கிப் பகவத்தரிசனமே முக்கியமாகக்கொண்டு தவஞ்செய்வனர். அவருடைய தவத்துக்கு இரங்கி உலகமாதாவாகிய விஷ்ணு பத்தினியும் ஓர் இளங்குழந்தையால் அத்துளசி வனத்தி லுள்ள ஒரு செடியினடியில் எழுந்தருள அக்குழந்தையைக் கண்டமார்க்கண்டேயர் ஆனந்தபரவசராய்த்தரித்திரன்கண்ட நிதிக்குவியலைப்போலக்கண்டு எடுத்துவந்து வளர்த்து வரு நாளில் அப்பெண்ணின்அழகைக்கண்டு “இப்பெண்ணுக்குத் தகுதியான புருஷனெங்குளனே? பிரமாதிதேவர்களும் இவள் கட்டழகுக்கு ஒவ்வார்கள். ஆதலால்இவளுக்குப்பதி வைகுண் டபதியே என்பதற்குச் சந்தேகமேயில்லை எனநிச்சயித்துக் கொண்டிருக்குநாளில் ஒருநாள் விஷ்ணுவே கிழப்பிராமண வேஷம் பூண்டு தள்ளாடித்தள்ளாடி நடந்துகொண்டு மார்க் கண்டேயரிடம் வந்தார். அவரைக்கண்டவுடன் மார்க்கண்டே

யாரும் எழுந்து எதிர்சென்று அர்க்கியபாத்திய ஆசமனீய கொடுத்து அவர் பாதத்தைச் செவ்வையாய்ச் சுத்திசெய்து துடைத்துப் பிராமணோத்தமா! தங்களுக்கென்ன விருப்பமோ அதைக் கேளும் மாத்திரமன்ன காலம் வீணாகப் போகிறது" என்று கேட்டார். அதற்கு அந்தக் கிழப்பிராமணன் "ஐய மகாரிஷியே நீர் அன்புள்ளவரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கோ சந்ததி கிடையாது, சம்சாரத்திலோ விருப்பமுள்ளவனாய் இருக்கிறேன், உம்முடைய கன்னிகையை எனக்குக் கொடுக்கவேண்டும், கிழவனாய் எனக்கு உதவிசெய்வதற்கு வேறொருவரும் இல்லை; இப்பெண்ணால் எனக்கு மிக்க உபயோகமுண்டாகும்" என்று வேண்டிய கிழப்பிராமணனையும் தனது பெண்ணின் இளமைப்பருவத்தையும் யோசித்து மனம்வருந்தித் தனது பெண்ணினிடம் சென்று, "என் கண்மணியே உன்னை இந்தக் கிழவனுக்குத் தானஞ்செய்வதால் நான் பெரும்பயனை அடைவேன்; இல்லாவிட்டால் அதிதியாகவந்த இக்கிழவன் எனது புண்ணியங்களையெல்லாம் கொள்ளை கொண்டுபோய்விடுவான் என்பது உனக்குத்தெரிந்து தான் நான்செய்யும் காரியம்யாதொன்றும் தோன்றாமல் விழிக்கிறேன்" என்று கூறிய மார்க்கண்டேயரைநோக்கி, உலகமாதாவாகிய கமலை ஒன்றுமறியாத சாதாரணப்பெண்ணைப்போல், "என் ஐயா நானோ (பாலவயமுள்ள) சிறு பெண், வீட்டில் என்னை வேண்டிவந்திருப்பவரோ கிழவராயும், கோபத்தால் சிவந்தகண்களை யுடையவராயும் இருக்கிறார். வீட்டுக்காரியங்களில் ஏதாவது கொஞ்சம் தவறினால் உடனே என்னை வைது அடிப்பார், அதனை நான்கோபித்துக்கொண்டு ஆறு குளம் கிணறு முதலியவைகளில் எங்கேயாவது விழுந்து இறந்துவிடுவேன்; நான் இறந்ததைக் கேள்வியுற்று நீரும் பிராணனைவிடும்படி நேரிடும். தன் பெண்ணை ஓரிடத்தில் விவாகம்செய்து கொடுப்பதாயிருந்தால் செவ்வையாக விசாரித்துக் கொடுக்கவேண்டுமாகையால் நீர் அந்தப் பிராமணனை (உமக்கு உறவினர் எங்கேயிருக்கிறார்கள்? உமதிருப்பிடமெங்கே என்று கேட்டதுடன்

என் பெண் சிறுமி, வீட்டுக்காரியங்களொன்றும் தெரியாதவ
ளென்று சொல், அதற்கவர் என்ன மறுமொழி கொடுக்
கின்றாரோ அப்படியே செய்யுங்க) ளென்று கூறினன், அதை
மறைவிலிருந்து கேட்டுப் கிழப்பிராமணனாக யாகத்திற்கு
வந்த கமலக்கண்ணன் அம்மார்க்கண்டேயரை நோக்கி, முனி
வரே! எனக்கு உற்றார் இல்லை, ஊர் இல்லை, வீடு இல்லை, எல்
லாம் நீயே? எனக்குக் காசுபணம் கிடையாது, சம்சாரவாழ்க்
கையில் மட்டும் விருப்பமிருக்கிறது, எல்லாங் கருடாரூடன்
நீருணையால் சீக்கிரம் கைகூடும் என்றனன். இதைக்கேட்ட
மார்க்கண்டேயன் சம்மதித்து வீட்டுக்கு வந்து நடந்ததை
யெல்லாம் தன்பெண்ணுக்குச் சொல்ல, அப்பெண்
நீரென்செய்வீர் எனது பாக்கியப்படியே எல்லாம் நடக்கும்.
நான் ஜகந்நாதனாகிய நாராயணனையே குறித்திருந்தேன், நீர்
விதிப்படி காரியத்தைச் செய்யுமெனவும் மார்க்கண்டேயர்
மகாவிஷ்ணுவைத் தியானித்தார். உடனே கிழவராயிருந்த
பகவான் தன்னுருவைக்காட்டி அவர் செய்யும் கன்னிகாதா
னத்தை தீர்த்தத்துடனேற்று, ஓ மார்க்கண்டேயா, உமது
இஷ்டப்படியே நான் இங்கேயே இருக்கிறேன். உமது பெண்
குழந்தையாய் இருப்பதால் வீட்டுக்காரியங்கள் தெரியாதிருக்
குமென்றீரே, அப்பெண் எப்படிச்செய்தாலும்நான் பொறுத்
திருப்பேன என்றார். மார்க்கண்டேயர் ஆனந்தக்கடலில்
ஆழ்ந்து ஆனந்தபாஷ்பம்கண்ணினின்றும்தாரைதாரையாகச்
சொரிய உடம்பு புளகிக்க வாயாரவாழ்த்தித் தோத்திரித்து
என் ஆண்சிங்கமே! என்மகள் எனக்குஉப்பில்லாப்பண்டங்
கள் விரதத்திற்காகச் சேகரித்தவளாதலால் அவட்கு அது
தான் தெரியும், நீர் அதைஉகந்து உண்டு உப்பிலியப்பனென
இத்தலத்திலேயே எழுந்தருளி இருக்கவேண்டுமெனப் பிரார்
திக்க அவ்வாறே வீற்றிருக்கின்றார். அவ்வூருக்கு உப்பிலியப்
பன் கோயிலெனவும் பெயர் வழங்குகின்றது.

### 3-வது உருத்திராட்ச வனம்.

இந்தக் கும்பகோணத்தின் தென்மேற்கு மூலையில்
அரைக்குரோசத்தில் ருத்திராட்சவனம் ஒன்றுளது. அது

பரமசிவனுல் ஸ்தாபிக்கப்பட்டது மூப்பதுமுக்கோடி தே
தைகளும் இலைகளாகவும், இருடிகளும் கந்தருவர்களு
பெருங்கிளைகளாகவும், கின்னரர்கள் சிறுகிளைகளாகவு
விசுவேதேவர்களும் சாத்தியர்களும் வசுக்கள் எண்மரு
மருத்துக்களும் அவ்விருக்ஷத்திலுள்ள பட்சிகளாகவு
ஆணிவேர் பிரமனுகவும், பன்னிரண்டு சூரியர்களும் சுற்
வேர்களாகவும், தேவஸ்திரீகள் மரத்தின் பட்டையாகவு
வந்துசேர்ந்து எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கிற
கள். உலகத்திற்கு மங்களத்தை உண்டாக்குகிற சங்கர
அந்த மரத்தடியில் வசித்துக்கொண்டிருக்கிறார். முனிவ
ளால் இடப்பட்ட சாபத்தால் மிருக்கதாப முற்ற இயம
அத்தலத்தையடைந்து சிவனது சூலத்தால் செய்யப்பட்
தீர்த்தத்தைப் புதுப்பித்து அதற்குத் தன் பெயரிட்டு இய
தீர்த்தம் என்று வழங்கும்படி செய்து, தேவர்களைவருவித்
ஆவணிமாதம் அசுவனி நட்சத்திரத்தில் உற்சவாரம்ப
செய்வித்து ஒன்பதுநாள் உற்சவம் நடத்திக் கடைநாளாகி
அமாநிதி மகாநக்ஷத்திரத்தில்இமயதீர்த்தத்தில் தீர்த்தமளி
துஅத்தீர்த்தத்தில் பதினுயிரம் வருஷம் தவமியற்றித் த
சாபம் தவிர்ந்து அநேகவரங்களைப்பெற்று விசுவகர்மாவினு
பட்டணம் நிருமாணஞ்செய்வித்து முத்திபெற்றான்.

சூரசேனனென்ற ஒருவன் ஒருபிராமணனைக் கொன்
தோஷத்தினுல் பிடிக்கப்பட்டு எல்லாவிடங்களிலுஞ் செ
றும் நீங்காத பிரமஹத்தி இத்தலத்திற்வந்தி ஸ்நாநம் தரி
னம் முதலியவைகளைச் செய்து அன்னதானஞ்செய்ததா
நீங்கி முத்தனுனன்.

எக்கியனென்னும் ஒருசாதுப்பிராமணன் பிருதியா
பூர்வ வினையினுல் முயலகநோயை (அபஸ்மாரவியாதி சித்த
பிரமை) அடைந்து இத்தலத்தில் செய்த அன்னதானத்தா
அந்நோய்தவிர்ந்து சவுக்கியமடைந்தான்.

சுபுண்ணியன் என்னும் ஒருபிராமணன் தனது குருப
தினியின் கற்பைக்கெடுத்த பெரும்பாதகத்தை அத்தலத்தி
அன்னதானஞ்செய்து தொலைத்தான்.

ஆண்டவப்பனாகிய சூரியன் சாத்திரங்களால் விலக்கப்பட்ட கள்ளையருந்தியதாலுண்டான பாதகத்தை அந்தத் தலத்தில் தான் செய்த அன்னதானத்தால் தொலைத்தான்.

இந்திரனது ஐராவதம் துர்வாச இருஷிசாபத்தால் இழந்த தனது வெண்மை நிறத்தை இத்தலத்தில் இந்த இயம் தீர்த்தத்தில் மூழ்கிச் சாபம் நீங்கப்பெற்றது.

இவ்வாறு ஐராவதம் பூசித்ததால் ஐராவதநகரமென்று பெயர் பெற்றதன்றியும் அவ்விலிங்கத்திற்கும் ஐராவதேசுவரனென்றும் பெயருண்டாயிற்று.

தாரனென்னும் ஓர் அசுரன்தேவர்களை ஜயித்து, மரணமில்லாமலிருக்கவேண்டுமென்று விரும்பி, ஐராவதீசுவரனைப் பூசித்து வரம்பெற்றனன். அவனுடைய நூறு மனைவிகளும் அவரைப் பூசித்து நினைத்த வரங்களைப்பெற்றுச் சிவலோகம் அடைந்தார்கள். தாரன் பூசித்ததால் இத்தலத்திற்குத் தாரேசுவரம் எனப்பெயருண்டாயிற்று, இது தாராசத்திரமென வழங்கும்.

மேகதாரனென்னும் அவன் மகன் வைகாசிமாதத்தில் ஐராவதேசுவரனுக்கு உற்சவம்செய்து அவனடிபணிந்து இன்னும் அத்தலத்தைவிட்டு நீங்காமலே இருக்கின்றான். இத்தலத்தில் அன்னதானஞ்செய்து பெரும்பாதகங்கள் தொலைந்திருப்பதை அறிந்து பிற்காலத்து அரசரும் அவ்விடத்து அன்னசத்திரம் ஏற்படுத்த இன்னும் இவ்வன்னதானம் நடந்தேறிவருகிறது.

## 4-வது ஸ்வாமிமலை

கும்பகோணத்தின் வாயுமூலையில் ஒரு காவத தூரத்தில் சுவாமிமலையென்று ஒரு தலமுள்ளது. அம்மலையின்படிகள் பிரபவாதிவருஷ தேவதைகளாம். அம்மலையின் நாற்புறமும் இருது தேவதைகள் இருக்கின்றார்கள். அம்மலை ஏறுவோர் சுவாமியைத்தியானித்து வருஷ தேவர்களைத் துதித்துப் படிக்குப்படி தேங்காயுடைத்து மலைமீதுள்ள சுவாமியை வணங்கிப் பின்பு இலிங்கத்தைப் பூசிப்பதால்

அநேகபலனை அடைவார்கள். கார்த்திகைமாதம் பௌர்ண அபிஷேகஞ்செய்வித்துப் பூசித்து வணங்குகிறவர்களும் சி திரைமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியில் அங்கப்பிரதக்ஷணம் செய்பவரும், வைகாசிமாதம் பௌர்ணமியிலும் தை மாதம் பூசத்திலும் குமாரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கு ரனைப் பூசித்துவரும் நினைத்த பலனையெல்லாம் அடைவ கேகயநாட்டரசன் சிவத்துரோகம் செய்ததனால் தீராதவ நோயடைந்து ஜாபாலியின் வார்த்தையினால் தைப்பூசத்தி நீராடிக் குமரனுக்குப் பால்திருமஞ்சனஞ் செய்வித்து அவரை பூசித்து வணங்கியதால் அந்நோய் தீர்ந்து, அத்தலத்தை திருப்பணிமுதலியவைகளால் சிறப்பித்துச் சுவாமிக்கு மிகுந்த ஆபரணங்கள் செய்வித்தான். அப்புண்ணியத்தா அவன் கார்த்தவீரியன் என்னும் புத்திரனையடைந்தனன்.

### 5-வது பாடலவனம்.

இந்தக் கும்பகோணத்தின் ஈசான்னியபாகத்தில் பாடலவனம் என்னும் ஒருதலமுண்டு. அத்தலத்தில் சிவன் அழகிய உருவத்துடன் பொலிவுற்றிருப்பதால் தேவர்களெல்லாரும் அவரைச் சுந்தரேசனென்றுதிக்க வீற்றிருக்கின்றனர். இத்தலத்தில் அகத்தியமுனிவர் சொற்படி சுவர்ணரோமனென்பான் பரமனையருச்சித்துப்பெருமையடைந்தான். சித்திரை மாதம்பௌர்ணமியில்வாலகில்லியர்பூசித்துச் சாயுச்சியமடைந்தனர். சூரசேனன் என்ற ஓர் அரசனும், குபேரனும் பூசித்துப் பெருமையடைந்து குபேரன் சிவனுக்குத் தோழனானான். வங்கநாடாளும் சோமகேது என்பவன் அகத்தியமுனிவர் சொற்படி பரமனைஅருச்சித்து ஸ்வர்ணரோமனென்னும் மைந்தனைப் பெற்றான். இத்தலத்தில் பிரமதீர்த்தமென்னு ஒரு புண்ணியதீர்த்தமிருக்கின்றது. அப்பிரமதீர்த்தத்திற்குத்தென்பால் புன்னைவனம் ஒன்றுளது. அப்புன்னைவனத்தில் ஸ்ரீ பூமிநீலா ஸமேதராய் காலவஇருஷிக்கு வரமளித்த வேங்கடேசப்பெருமாள் ஒருவர் எழுந்தருளியிருக்கின்றனர். இவரை ஒருகால் தரிசனஞ்செய்பவர் இந்தப்பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைசெய்வதனாலுண்டாகும் பலன்

அனைத்தும் ஒருங்கேயடைவார்கள். கும்பகோணயாத்திரையைமேற்கொண்டு செய்கிறவர்களுக்கு யாத்திரைசெய்வதே முக்கியமாகும். சிவன் விஷ்ணுமுதலியோர்களுக்கு அத்தியந்தம் பிரியஸ்தானங்களாகிய இந்தக்ஷேத்திரயாத்திரையால் இஷ்டமான பலன்களெல்லாம் அடையலாம். இவற்றை ஒருதரம் தரிசிப்பதாலும் நினைப்பதாலும், இவற்றில் வாசம்செய்வதாலும் மறுஜன்மம் இல்லாதவராய் முத்தியடைகிறார்கள்.

இவ்வைந்து க்ஷேத்திரங்களும் கும்பகோண க்ஷேத்திரத்திற்கு அங்கக்ஷேத்திரம் எனப்படும். இவற்றைத்தவிரப் பதின்மூன்று க்ஷேத்திரங்கள்பிரத்தியக்ஷக்ஷேத்திரங்களாம்.

அதன்பின்பு கும்பகோணத்தலத்துக்குள்சென்று மகாமகவிரதத்தை விதிப்படிசெய்து மகாமகதீர்த்தத்தில் நீராடி. பிறகு அத்தலத்திலுள்ள சைவவைஷ்ணவ ஆலயங்களுக்குச் சென்றுமூர்த்திகளைப் பூசனைசெய்விக்கவேண்டும். அவற்றுள் மகாமக ஸ்நாந விரதத்தைச்சொல்வதற்குமுன் நீராடும் தீர்த்தங்கள் இவையெனவும், அவற்றின் பெருமையும், நீராடும்விதமும், நீராடுவதாலுண்டாகும் பலனும்கூறப்பட்டுள்ளன.

பூலோகத்தில் புண்ணியதீர்த்தங்களாய் விளங்குகின்றவை கணக்கில்லாதனவாய் இருப்பினும், அவற்றுள் முக்கியமானவை, கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி, நருமதை, சிந்து, காவேரி, வேகவதி, சரயு என்னும் ஒன்பது நதிகளேயென அநேக இதிகாசபுராணாதிகளில் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் மூன்று உலகினும் செல்கின்ற காரணத்தால் திரிபதகையென்றும், பகீரதன் தவத்தால் வந்ததால் பாகீரதியென்றும், சந்நுமகாரிஷியின் யாகத்தையழிக்க அவர்கண்டு பகீரதன் வேண்டுகோளுக்கிரங்கிப் பிறகுகாதால்விடுத்தலால் பாகீரதியென்றும், பெயரையுடையதாகிக் காசியிலோடுகின்ற கங்கையினும் மிகுந்தகாவிரி, சையமலைத்தொடங்கிச் சமுத்திரம்வரையில் ஓடுகின்றதாயினும், இதில் மூன்றிடங்கள் விசேஷமானவை, அவை, திருவரங்கம், கும்பகோணம், காவிரிசங்கமாகும் இடம் என்றும், இம்மூன்றிலும் சங்கமுகத்தி

னும், திருவரங்கமும் அதினும் குடந்தையும் விசேஷமானதென்றும், காவிரி நீர்தோய்ந்து எந்தத்தேசத்தில் செல்லுகின்றதோ அத்தேசத்துள்ளார்யாவரும்முத்தியடைகிறார்கள் ஆகையால் அக்காவிரிதீர்த்தத்திலேயே வசிப்பவர்களுக்கு என்னபாதகந்தானுண்டாகும். ஒருபாதகமும் உண்டாகவே மாட்டாது என்றும், இன்னும் பலவாறாகவும், பிரமாண்டம் பிரமகைவர்த்தம், ஆக்கிநேயம், சேஷதருமம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

இதுவுமன்றி, சாதாரணமாய் எல்லா இடங்களிலிருந்தும் செய்யும்பாவங்கள் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு வந்தால் தீர்ந்துவிடும். புண்ணிய க்ஷேத்திரங்களிலிருந்து செய்யும்பாபம் காசியில்தீரும், காசியிலிருந்து செய்யும்பாபம் கும்பகோணத்தில் தீருமென்றும், கும்பகோணத்திலிருந்து செய்யும் பாபம் கும்பகோணத்திலேயே தீருமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளுக்கெல்லாம் காரணம் இக்காவிரிநதியே.

இக்காவிரிநதி அல்லாமல் வேறு பலதீர்த்தங்கள் இருக்கின்றன அவைகள் ஒன்றைவிட ஒன்று அதிகமென்மையுடையதாகவே இருக்கின்றன. அவைகளைப்பற்றிய புராணத்துள் விரிவாகக் கூறியிருப்பினும், சிறிதளவு இதில் கூறப்படுகின்றது.

முதலில் பரமனது திருவுளப்படி அமுதம் தங்குவதற்குப் பூமியிடங்கொடுத்ததாலாகிய அமுதவாவிகள் இரண்டின இவையன்றிக் காவிரிநதியும் ஒன்றிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவையல்லாத மற்றத்தீர்த்தங்களைப்பற்றிச் சிறிது சொல்லப்படுகிறது.

முற்காலத்தில் தீர்த்ததேவதைகளாகிய ஒன்பதின்மரும் சிவபெருமானிடம்சென்று "பரமேச உலகத்துள்ளார்யாவரும் மகாபாதகங்களையெல்லாம் போக்குவதற்காக எங்களிடம் வந்து நீராடித் தாங்கள் பரிசுத்தர்களாகிப் போய்விடுகிறார்கள்; நாங்கள் எங்கள் பாவங்களை எப்படித் தீர்த்துக்கொள்வோமென்று" பிரார்த்திக்கப் பரமகிருபாநிதியாகிய சங்கி

கூடன், "தீர்த்ததேவதைகளே; தக்ஷிணத்தில் கும்பகோணமென்றஸ்தலமும் அமுதவாவியென்ற இரண்டுதடாகங்களும் உள. அவற்றிற்சென்று மகாமகதினத்தில் நீராடுவீராகில் உங்கள்பாதகங்களெல்லாம்போய் நீங்களும் பரிசுத்தராவீர்கள்" என்றுசொல்ல, அக்கன்னிகைகள், "கடவுளே! நாங்கள் அத்தலமும் தீர்த்தமும் இருக்கும் இடத்தையறியோமென்றார்கள். பரமசிவன் பெண்கள் நான்விசுவநாதராக அங்கு எழுந்தருளுவேன். நீங்கள் கன்னியர்களாகி மகாமக தீர்த்தக்கரையில் எப்பொழுதும் இருக்கவேண்டுமாகையால், இப்பொழுது வாரணாசி என்னும் காசிக்குச் செல்லுங்கள் என்றுசொல்லி, அவர்கள் காசிக்குவந்தவுடன் தனதுபரிவாரங்களுடனும் அவர்களை ஒருநிமிஷத்தில் கும்பகோணத்தில் இருக்கும்படிசெய்தார். கும்பகோணத்தையும் சுத்ததீர்த்தத்தையும்கண்ட தீர்த்தகன்னிகைகள் மிக்க ஆநந்தமுடையவர்களாய்க் கூடவந்த விசுவநாதருடன், அபிமுகநாதர், கவுதமேசர் முதலியவைகளையும் தீர்த்தத்தையும் பிரதட்சணநமஸ்காரங்கள்செய்து வணங்கி, அத்தீர்த்தத்தில் நீராடித் தாங்கள் எல்லோரும் எப்பொழுதும் அத்தீர்த்தத்தில் ஜலரூபிகளாய்க் கலந்திருப்பதுடன் அத்தீர்த்தத்திற்கு வாயுமூலையில் சற்றுக் கிழக்கே மேற்குமுகமாக விசுவநாதர் வீற்றிருக்கத் தீர்த்தத்திற்கு எதிர்முகமாகக் கன்னிகைகள் வீற்றிருக்கின்றார்கள்.

இதன்றி அவ்வொன்பது தீர்த்ததேவதைகளும் தங்கள் தங்கள் பெயரால் ஒவ்வொரு தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடுவோர்க்குக் கணக்கில்லாப் புண்ணியத்தையும் கொடுக்கின்றார்கள். இந்திராதி திக்குபாலகர்களும் தங்கள் தங்கள் திசையில் தங்கள் தங்கள் பெயரால் ஒவ்வொருதீர்த்தமும், பிரமன் வடக்குத்திக்கில் தன்பெயரால் ஒருதீர்த்தமும் உண்டாக்கிப் பிரமஹத்தி முதலிய மஹாபாதகங்களெல்லாம் போக்குகின்றார்கள். அத்தீர்த்தங்கள் இருக்கும் முறைஅடியில் கூறப்படுகிறது.

மத்தியில் கன்னியாதீர்த்தமும் இதற்குக்கிழக்கில் இந்திரதீர்த்தமும்; தென்கிழக்கில் அக்கினிதீர்த்தமும், தெற்கில் யமதீர்த்தமும்; தென்மேற்கில் நிருதிதீர்த்தமும்; மேற்கில்

வருணதீர்த்தமும்; வடமேற்கில் வாயுதீர்த்தமும்; இத தக்
கிழக்கில் பிரமதீர்த்தமும், அதற்குக்கிழக்கில் குபேரதீ ர்த்த
முமும், வடகிழக்கில் ஈசானியதீர்த்தமும் இருக்கின்றன. இ வை
யன்றி இந்திரதீர்த்தத்திற்கும், அக்கினிதீர்த்தத்திற்கு ம் இ
டையில் கோதாவரியும், அக்கினிக்கும் இயமனுக்கும் இ டை
யில் காவிரியும்; இயமனுக்கும் நிருதிக்கும் இடையில் கன்
னியாகுமரியும்; நிருதிக்கும் வருணனுக்கும் இடையில் ( வக
வதியும், வருணனுக்கும் வாயுவுக்கும் இடையில் சரயு ம்,
வாயுவுக்கும் பிரமதீர்த்தத்துக்கும் இடையில் சங்கையும் பி
ரமதீர்த்தத்திற்கும் குபேரதீர்த்தத்திற்கும் இடையில் மு
னையும்; குபேரதீர்த்தத்திற்கும் ஈசானியதீர்த்தத்திற் கும்
இடையில் நருமதையும்; தீர்த்தரூபிகளாய்நின்று நீரா டு
வோர் எண்ணியபடியெல்லாம் வரமளித்துக்கொண்டு எப்
பொழுதும் சான்னித்தியமாயிருக்கிறார்கள்.

இத்தீர்த்தம் ஒவ்வொன்றிலும் ஆடுவோர்களு க்கு
உண்டாகும் பயனெல்லாம் ஒருங்கே தரக்கூடியது மா
மகாமகதீர்த்தம் புருடர்களுக்கும் விசேஷமாகப் பெ ண்
டீர்களுக்கும் நினைத்த பயனெல்லாம் கொடுக்கத்தக்க து.
பெண்டிர்கள் தாங்கள் கரளீவந்தியாகவேனும், மிருதவ ந்தி
யாகவாயினும் இருந்து மக்கட்பேற்றை விரும்பித் தங ள்
மலட்டுச்குணம் நீங்க எண்ணுவார்களாகில், அம்மகளிர் பக்
திசிரத்தையுடையவர்களாய்ச் சில கன்னிகைகளுடன் கன்
னியாதீர்த்தம்சென்று, தாம்நீராடி ஒன்பதுகன்னிகைகள ட
பூஜித்து, பாயஸங்கொடுத்து, நல்லஉண்டியளித்துத், தனி த்து
னியே ஒன்பதின்மருக்கும் தட்சணையுடன் தாம்பூலங்கொ டு
த்து மூன்றுதரம் நமஸ்காரம் செய்யவேண்டும். பிறகு அ வர்
களிடம் விடைபெற்றுக் கன்னியாதீர்த்தமடைந்து ஒன் து
சுமங்கலிகளுக்கு எண்ணெயிட்டு முழுக்காட்டி, மஞ்சள், நக
குங்குமம், சந்தனம், புஷ்பம் முதலியவைகள் கொடுத்து உ சரி
த்துத் தட்சணைகொடுத்து ஏதேனும்பழங்கள் அவர்களு க்கு
மனத்திருப்தி யுண்டாகும்படியளித்துத் தாமும் எண்ணெ யி
ட்டு முழுகிப், பாயசமுண்டு, நவகன்னியர் கோயிலுக் கு
சென்று [illegible] வந்து தனித்தனி [illegible]

னிகைகளுக்கும், ஒன்பது ஒன்பது தேங்காய் உடைத்துச் மர்ப்பித்து, அக்கன்னியர்களுக்குத்தங்களால்இயன்றமட்டும் உற்சவம்செய்யவேண்டியது. பிறகு தாம் தம்வீட்டிற்கு (வந்தி-மலடி, -காகம். குயிலினது முட்டையையும், குஞ்சையும் தன்குஞ்சுபோலத் தான்மக்களைப்பெறாளாகிக் குழந்தையாசையால்பிறர்குழந்தையைவளர்ப்பவள். கதளிவந்தி-வாழை ஒரேதார்போடுவதுபோல ஒரேகுழந்தையைப் பெறுபவள். மிருகவந்தி - எத்தனைபெற்றாலும் ஒரு குழந்தையேனும் உயிரோடிராமல் இறந்துபோகும் குழந்தைகளை யுடையாள்.) வந்து, தரையில்படுத்து உறங்கவேண்டியது. இவ்வாறுநான்கு வெள்ளிக்கிழமைகளிலாவது கார்த்திகை சோமவாரங்களிலாவது ஆவணிமாதத்தில் அல்லது புரட்டாசியிலாவதுவரும்வளர்பிறை நவராத்திரியிலாவது தநுர்மாதத்திலாவது அல்லது நித்தியமாவது பூஜைசெய்தால் மக்கட்பேறு உண்டாகுமென்பதற் கையமில்லை. தேசாந்தரத்திற் போயிருந்தாலும், குக்கிராமத்திலிருந்தாலும், அல்லது பட்டணத்திலிருந்தாலும், இம்மாதிரி ஒன்பது கன்னியாவிக்கிரகங்களைச்செய்து, முன்சொன்னவிதமாகச் சுமங்கலிகளைப் பூசைசெய்தால் மக்கட்பேறுண்டாகுமென்பது நிச்சயம்.

நெடுநாள் பிரவிடையாகாமல் இருக்கிறபெண்கள் முன்சொன்னபடி பூசைசெய்தால் பக்குவத்தையடைந்து புருஷனைச்சேர்ந்து நல்லபிள்ளைகளைப்பெற்றுத் தன்கணவன், மாமி நாத்தி முதலியவர்களுக்கு அன்புடையவள் ஆவாள். இது இப்பொழுதும் நடந்துகொண்டுவருகிறது, இதற்கு மகாமகப்பெண்களுக்குப் படைத்தல் என்றுபெயர்) கணவன் விரோதமடைந்தபெண் இப்படிப்பூசைசெய்தால்கணவன்விரோதம் நீங்கி அவளைச்சேர்வான்.

ஆடவர்கள் அல்லது ஸ்திரீகள் எவ்விதத்திலும் தீராத நோயுடையவர்களானாலும் இத்தீர்த்தத்தில் நீராடி நவகன்னிகைகளுக்கு விதிப்படி பூசைசெய்தால் ரோகம்தீர்ந்து ஆரோக்கியமுடையவராய், அறிவையும் பக்தியையும் எங்கேபோனாலும் ஜயத்தையும் அடைகிறார்கள். இளமைப்பருவத்தில் கணவனை இழந்தபெண், இதில் நீராடி நவகன்னிகைக

ளுக்கு விதிப்படி பூசைசெய்வாளாகில் எல்லாப்பாவங்களு நீங்கி மறுஜன்மத்தில் தன் கணவனுடன் நன்றாக வாழ்வ

இத்தீர்த்தம் புருஷார்த்தங்களைக் கொடுக்கும்; எல் யாகபலனையும், எல்லாத்தீர்த்தங்களிலும் படிந்தபலனையு தரும். எல்லாநோயையும் நீக்கத்தக்கது. இதை ஒருதா பிரதட்சணம்செய்தால் மேருவைச்சுற்றிப் பூமியை நூறுதா பிரதட்சணம்செய்தபலனையும், ஒருதரம்நமஸ்காரம்செய்தா உமாதேவனையும், சிவனையும் நூறுதரம் செய்தபலனையு அடைவார்கள்.

ஒருபுருஷன் மக்கட்பேற்றை விரும்பினால், மாசிமாத தில் ஒருநாளில் ஐந்துதரம் ஸ்நாநம்செய்து ஒவ்வொருத வைக்கும் உலர்ந்தவஸ்திரம் உடுத்திக்கொண்டு புண்டர தரித்து மூன்றுதரம் அர்க்கியம்கொடுத்து நல்லபச ளைப் பிராமணர்களுக்குத் தானம்செய்து, பிறகும் முன்செ ன்னபடி நீராடுவானானால் நல்லபுத்திரனையடைவான். இ உண்மை.

எவன் இத்தீர்த்தத்தில் நியமப்படி நீராடுகிறானோ அவன்தனது ஏழுகுலங்களையும் பரிசுத்தமாக்கிக்கொள்ளு றான். ஏழுகுலங்களாவன. 1. தன்குலம், 2- தன்பெண்ணை கொண்டவன்குலம், 3. தாயின் தகப்பன்குலம், 4. சிறிய யின்குலம், 5. உடன்பிறந்தாள்குலம், 6. தந்தையொடு பி த்தவள் குலம், 7. தன்மாமன்குலம்.

புண்டரம்-ஊர்த்துவபுண்டரம், திரிபுண்டரம் எ இரண்டு ஊர்த்துவபுண்டரம்-நெற்றியில்நெடுக்காகச்சந்த கோபி மண்முதலியவைகளால் உயர்த்தி இடுவது. திரிபுண் ரம்-விதியால் நெற்றியில் குறுக்கேமுக்கீற்றாக இடுவது.

ஸ்நாநம்செய்யும் நியமவிரதம்எப்படியெனில், பிரமசா கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என்கிற நான்கு ஆ ரமத்தாரில் யாவராயினும் (முதல்நாள்) தீர்த்தத்தில் ஸ்நா செய்து, பிராமணர்களைக்கொண்டு புண்ணியாகவாசகம் செ வித்து, அந்தத்தீர்த்தத்தால் தன்னைப்புரோக்கணம்செய் சுத்தியாக்கிக்கொண்டு, அதில்சிறிது நீர் உட்கொண்டு, பஞ் கவ்வியம்சேர்த்து உண்டு, பிறகு சிலஅந்தணர்களுக்குஅ

வையோடுகூடிய அன்னம், பாயஸம், பக்ஷணங்கள் முதலிய வைகளை வேண்டியஅளவு உண்பித்து, தட்சிணை தாம்பூலம், ரத்தனவஸ்திரம்முதலியகொடுத்து, சந்தனம், புஷ்பம்முதலிய வையால் செவ்வையாகப்பூசித்து வணங்கி அவரிடத்தில் உத்தரவுபெற்றுக் குருவினிடம்சேர்ந்து அவரையும் இவ்வாறு பூஜித்து அவரிடத்தும் உத்தரவுபெற்று அதைச்சிரங்கொண்டு கிரஹஸ்தனுயின், புத்திரமித்திரகளத்திரவாகனுதிகளிடத்தில் அதிகபற்றில்லாதவனுய் க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தி இவைகளின் வைபவங்களைச் செவ்வையாய்த் தெரிந்தவரிடத்தில் கேட்டு, அறுசுவைகளையும்; தாம்பூலம் க்ஷெளரம்பெண்போகம் முதலிய இவைகளையும்; நகங்கிள்ளல், கெட்டவருடன்சேர்ந்து அவருடன்பேசுதல் உருசியான பட்சணம், பழையசாதம் சொரி நாய் உண்ட மீதி அன்னம் முதலியவைகளைநீக்கி; ஒருநாளைக்கு ஒருதரமேஉண்டு தரையில் படுத்துறங்கி; மறுநாளுதயத்தில் மகாமகதீர்த்தமென்று ஸ்நாநம் செய்து வழக்கப்படி ஜெபங்களைச்செய்து நித்தியகருமங்களாகிய அநுஷ்டாநங்களை முடித்து, அவ்விடத்திலுள்ள ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும தெய்வதைவணங்கி, காலைக்கடன் செய்யவேண்டியது. (அது காலைமுழுக்கு நடுப்பகலிலும் அவ்வாறு நீராடிப் பிதுர்தர்ப்பணம் தீர்த்தக்கரையில் செய்து தேவயக்கியம், பூதயக்கியமுதலியபலிஹோமங்களைச் செய்து பிராமணர்களுக்கு அன்னமிட்டு, தானும் ஒரேதரம் ஹவிஸ் உண்டு, அன்று இரவும் தரையில்படுத்து, நித்திரை செய்து எழுந்து; மூன்றும் நாள் காலையிலும் தீர்த்தக்கரை சென்று, ஸ்நானம்செய்து தீர்த்தக்கரையிலுள்ள தேவதைகளையும், தீர்த்ததேவதைகளையும் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து பூஜித்து உபசரித்து அவர்கள் ஆஞ்ஞைபெற்று; நவகன்னியர்கள் இருக்கும் ஆலயத்திற்குச்சென்று அவர்களை விதிப்படிப் பூஜித்து, அவ்விடத்திலுள்ள அரசமரத்தை வலம்வந்து, தீர்த்ததேவதைகளை நமஸ்காரஞ்செய்து, விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு நல்ல பழங்கள் பொன், வெள்ளி முதலிய பொருள்களைக் கைநிரம்பக் கொண்டு குளத்தில் இட்டு நீராடவேண்டியது. சத்தியிருக்குமாகில்

இரண்டு முறங்களில் இரண்டு இரவிக்கைத் துண்டுகளைத் அவற்றின்மீது சந்தனம்-மஞ்சள்-குங்குமம்-புஷ்பம்-பாக்கு வெற்றிலை-பொன்-வெள்ளி முதலியவைகள் வைத்துத் தீர்த்த மத்தியில் போட்டு நீராடலாம். நீராடியபின் ஸ்நானம் தருப்பணங்களைச் செய்து உலர்ந்த உடையுடுத்துப் புண்டரங்களைத் தரித்துத் தங்கள் தங்கள் அநுஷ்டானப்படி ஜபம் செய்து, நவகன்னியர் சன்னதிக்குவந்து, அவ்விடத்தில் உள்ள அரசவிருக்ஷத்தைப் பிரதட்சணம் செய்து, அம்மரத்து நிழலிலிருந்து ஒன்பது கன்னிகைகளுக்குத் தனித்தனி முன்பு சொன்னபடி இவ்விரண்டு முறங்களில் பதார்த்தங்களை நிறைத்துக்கொடுத்து; அவர்களைச் செவ்வையாய்ப் பூசித்து தக்ஷிணை-தாம்பூலம்-பாயஸம் முதலியவைகளைக் கொடுத்து அவர்களை உண்ணச்செய்யவேண்டியது. பிறகு ஏவினவர்களுக்கன்னமிட்டுக் கும்ப இலிங்கேசர் சாரங்கபாணி சக்கரபாணி முதலியோர் ஆலயத்துக்குச்சென்று அவர்களைப் பிரதட்சண நமஸ்காரம்செய்து அர்ச்சனை செய்வித்து வீடு சேர்ந்து அன்றைக்கும் ஒருதரம் புசித்துத் தரையிலிருக்க வேண்டியது.

நான்காம்நாள் காலையில் எழுந்து பிதுர்தேவதைகளை உத்தேசித்துப் பக்தியோடு சங்கல்பம்செய்து தலைமட்டும் க்ஷவரம் செய்துகொண்டு முழுகித் திரிபுண்டரம் தரித்து சக்திக்குத்தக்கபடி பொன்தானம்செய்து பாவபழமுண்டு அன்றையதினம் அன்னம் அருந்தாமலிருந்து ஐந்தாநாள் பிதுர்தேவதைகளுக்குப் பிண்டம் கொடுத்துச் சிராத்தம் செய்யவேண்டியது. ஸ்நானவிதிப்படி செய்யவேண்டிய தீர்த்தச்சிராத்தம் தவிர வேறு அன்ன சிராத்தமல்ல. இவ்வாறு நான்குநாள் நீராடும் விரதத்தையும் ஐந்தாம்நாள் அதற்கு அங்கமாகப் பிதுர்தேவதைகளுக்குப் பிரீதியாகத் தீர்த்தச் சிராத்தத்தையும் செய்து வீடுசேர்ந்து பிராமணபோஜனம் செய்வித்துத்தானும் இஷ்டமித்திர பந்துவர்க்கங்களோடு உண்டு விரதம் செய்கிறவன் இகத்தில் புத்திரமித்திர களத்திரர்களுடன் ஐசுவரிய விருத்தியையடைந்து ஹரி-சிவபக்தியையும் ஞானவைராக்கியத்தையும் அடைந்து பரத்தில்

நிரதிசய இன்பவீடாகிய கைவல்லியத்தையும் அடைகிறான்.

## 7-வது ஸ்நானத்தின் பின் தானம் செய்யுமுறை.

பதினாறு பிராமணர்களைத் தனித்தனி பதினாறு ஆஸனங்களில் உட்காரச்செய்து அவர்களை அர்க்கியபாத்திய ஆசமனத்தினால் உபசரித்துச் சந்தனம் புஷ்பம் முதலியவைகளால் பூஜித்துப் பதினாறுவகைப்பழம் தனித்தனியே தானம்செய்து பிறகு தனது சக்திக்குத் தக்கபடி பசு, பெண், பொன், குடை, வஸ்திரம், பூணூல், குதிரை, பணிப்பெண், எருது, பால், அறுசுவையன்னம், பாயசம், தானியம், கந்தம், பூமி, முத்து முதலிய நவரத்தினம் தேன் உப்பு இலவங்கம் இவைகளைத் தானம்செய்து நூதன வஸ்திரத்தால் பதினாறுவகையும் சேர்த்துத் தூபதீபம்கொடுத்து உபசரிக்கவேண்டும்.

வியாழபகவானென்பவர் சிம்ம இராசியையடைந்து சந்திரனுடன் கூடிச் சூரியன் கும்பத்தில் வருங்கால், பதினான்கு உலகங்களிலும் தேவர்களால் நிருமிக்கப்பட்டதும் சகலபாபங்களையும் போக்கடிக்கக்கூடியதுமான எல்லாத் தீர்த்தங்களும் இக்கன்னியா தீர்த்தத்தை வந்துசேருகின்றன. ஆகையால் அந்த மகாமக வருஷத்தில் எந்தத்தீர்த்தத்தில் ஆடினாலும் சரியானபலன் கிடைக்காது. அந்தத் தீர்த்தங்களெல்லாங் கொடுக்கக்கூடிய சகலபலங்களையும் ஒருங்கே கொடுக்கக்கூடியது. இத்தீர்த்தமாகையால் எல்லாத் தீர்த்தங்களிலும் இது மேன்மை பெற்றுளது.

வேறு எந்த க்ஷேத்திரத்தில் செய்த தானதருமங்களும் இதற்கிணையாகாது. அப்பலன் எல்லாம் இங்கேகிடைக்கும். இப்பலனை யடைவதற்காகப்பிரமன்முதலிய தேவதைகள் எல்லோரும் தங்கள் தங்கள் இடங்களை விட்டுவிட்டு ஒருவருஷம் முந்தியே இக்கும்பகோணத்தையடைந்து ஒரு அம்சமாக இருக்கின்றார்கள். தீர்த்த கன்னிகைகளை இத்தலத்திற்கு இட்டுக்கொண்டு வருவதற்காகப் பிரமன் முதலிய தேவர்கள் பரம சந்தோஷத்தோடு அழைத்துக்கொண்டுவருகிறார்கள். எல்லாத்தேவதைகளும் மகாமக ஸ்நானத்தில் பதிந்த சித்

தத்தோடு அதில் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் இருப்பத
அவர்சித்தம் வேறொன்றிலும் பிரவேசிப்பதில்லை. இதை
கொண்டே எல்லாத் தேவதைகளுக்கும் தங்கள் எல்லா எ
ணங்களையும் விட்டுவிட்டு மகாமக ஸ்நானத்திலேயே மு
நோக்காக வருகிறபடியால் சுபகாரியங்களுக்கு யாதொரு ட
ணில்லையென்றும் விவாகம் முதலிய கல்யாண கிரிய
களும் கோதானம் பூதானம் முதலிய தானங்களும் கிண
குளம் சோலை மண்டபம் வீடு முதலியவைகள் உண்டா
லும், யாத்திரையும் கூடாதென்றும் விலக்கியிருக்கிறார்
என்று கும்பகோண க்ஷேத்திர புராணத்தில் கூறியிரு
துடன் ஹேமாத்திரியென்னும் கிரந்தத்தில் குருசுக்கிர
இவர்கள் அஸ்தமானகாலத்தில் விரதங்களை ஆரம்பித்தலு
முடித்தலும் கூடாதென்று கார்க்கியரும், விருத்தமனு
பிரகஸ்பதியும், குருமகரமாகிய நீசத்திலாவது வக்கிரனாக
வது அதிசாரத்திலாவது பாலியனைகவாவது இருக்கு
காலத்திலும் சிம்ம இராசியிலிருக்கும் காலத்திலும் ஒ
காரியமும் செய்யக்கூடாதென்று சொல்லியிருப்பதுமன்றி
தேவி புராணத்திலும் வஸிஷ்ட ஸ்மிருதியிலும்விஷ்ணு ஸ்
ருதியிலும் காலவிதாநத்திலும் காலாமிருதம்அன்பத்தைந்
சுலோகத்திலும் குருசிம்மத்தில் இருக்கிறகாலம் சுபகாரிய
களுக்கு ஆகாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தீர்த்த ஸ்நானத்தால் போகும் பாதகம்.

இந்த மகாமக உற்சவத்தின் கடைசிநாளில் ஸ்
னம் செய்வதற்காக எல்லாத் தீர்த்த தேவதைகளுக்கு
ஒருமித்துவந்து வந்து சேருகிறார்கள். அங்குள்ள தேவ
களெல்லாம் அவர்களுடன் கலக்கிறார்கள். இக்காலத்தி
நீராடுவதால் ஒருவராலும் போக்கப்படாத சகலபாபங்களு
நாசத்தையடைகின்றன. மனத்தாலும் வாக்காலும் காயத்த
லும் செய்யப்பட்ட சகலபாபங்களும் பிராமணனைக்கொன்
தோஷமும், கட்குடித்தல், பிறர் பொன் திருடல், ஆசிரிய
மனையாளைக் கற்பழித்தல் முதலிய பாதகங்களும், இப்பா
கங்களைச்செய்த வருடன்சேர்ந்த தோஷமும், மாதா, பிது
குரு, சிவன், விஷ்ணு இவர்களுக்குத் துரோகம் செய்தபர்

மும், கெட்டதானம் வாங்குதல் கெட்டவர், விசுவாசமில்லாதார் இவர்களுடன் சேர்தல் முதலியவைகளால் உண்டாகும் பாதகமும், இதிகாசம், புராணம், க்ஷேத்திரம், மூர்த்தி தீர்த்தம் முதலியவைகளை நிந்திக்கிறவர்களுடைய பாவமும், அரசமரத்தை வெட்டியவனும், மறுமாதரைப் புணரும் எண்ணமுடையவனும், சிவசொத்தைத் திருடுபவனும், சிவதருமத்தைக் கெடுத்தவனும் சிவஸ்தலங்களுக்கு அபகாரம் செய்தவனும் துளசிமணியைத் திருடினவனும், கிணற்றைத் தூர்த்தவனும், தகப்பன் தருமத்திற்காகவைத்த சொத்தை விற்றவனும், எள்ளு வஸ்திரம் இவைகளை விற்றவனும், செக்காட்டுபவனும், செக்குத்தானம்வாங்குகிறவனும் எண்ணெய் விற்பவனும், எள்ளுத்தானம் வாங்கினவனும், பசுகன்று இவற்றை விற்றவனும்,விபூதி உருத்திராக்கம திருடுபவனும், சிவபூஜைக்குக் கெடுதிபண்ணுபவனும், சாளக்கிராமம் திருடுபவனும், சாளக்கிராமத்தை விங்குகிறவனும் தைலம்-மது முதலியவைகளைத்திருடுபவனும் வில்வமரத்தை வெட்டுபவனும், துளசியை விற்பவனும், அவிரி ஊமத்தை முதலியவைகளை விற்பவனும் நெல்லிமரத்தை வெட்டுகிறவனும், சந்தனம்-கற்பூரங்களை விற்பவனும், கன்னிகையைப் பணம்வாங்கிக்கொண்டு தானம் செய்பவனும், பெண்கொடுத்துப்பெண் வாங்குபவனும்,பெண்களின் நகைகளைத் திருடுபவனும் கன்னிகைகளுக்குக் கலியாணம் செய்வித்து வைப்பதற்காகத் தாருவாங்கி ஜீவிப்பவனும் கன்னிகைகளுக்கு நகைபோடுகிறேன் என்று சொல்லிப் பணம்வாங்கிக்கொண்டு நகைபோடாது மோசம் செய்பவனும் பொய்க்கன்னிகையை விவாகம் செய்விப்பவனும் ஒரு தருமத்தை ஒருவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அதை தூஷிப்பவனும் புருஷனுக்கும் பெண்சாதிக்கும் இடையில் பெரிய விரோதத்தை உண்டாக்குபவனும் தகப்பனுக்கும் மகனுக்கும் பெரியவிரோதத்தை யுண்டுபண்ணுகிறவனும் தகப்பனிடத்தில் பெரியவிரோதத்தை யுடையவனும் பிள்ளையினிடத்தில் பெரியவிரோதத்தையுடைய தகப்பனும் தகப்பனுக்குச் செய்யவேண்டிய சிராத்தத்தை விட்டவனும் சிசுவைக்கொன்றவ-

னும் கருப்பத்தை அழித்த மகாபாபியும் மாட்டுத்தொழு
தில் நெருப்பிட்டவனும் வீரனை மோசஞ்செய்து கொன்
னும் விஷ்ணு கைங்கரியத்தைக் கெடுத்தவனும் விஷ்ணு
யும் விஷ்ணு வைபவத்தையும் பழிப்பவனும் விஷ்ணு நா
மைதச்சொல்லாதிருப்பவனும் விஷ்ணு க்ஷேத்திரங்
அழிப்பவனும் மயானத்திலுள்ள பொருளைத் திருடுபவ
தனது ஆசாரியனைத் தூஷிப்பவனும் தனது கோத்திரத்தி
பிறந்த கன்னிகையைக் கொள்பவனும் எல்லா இடங்களி
உண்பவனும் கெட்டவர்கள் அன்னத்தைப் புசிப்பவ
தீட்டுக்காரர் சமைத்த சாதத்தை உண்பவனும் யாகத்தை
கெடுப்பவனும் தீக்ஷிதன் பெண்டிரைப் போகிப்பவ
ஓதுவிப்பவன், சந்நியாசி இவர்கள் அன்னத்தால் ஜீவிப்ப
னும் இக்கும்பகோணத்தில் மகாமகத்தில் கன்னியாதீர்த்த
தில் ஒருகால் முழுகுவதினாலேயே தங்கள் பாபங்களினி
றும் நீங்கி நற்கதியடைகிறார்களென்பதற்குச் சிறிதும்
தேகம் இல்லை.

மாசிமாதத்தில் மகாமகதீர்த்தத்தில் பிதுர்களுக்குக்
ப்பு எள்ளால் திலதர்ப்பணஞ்செய்பவர்கோடி கயாசிரார்த்த
செய்த பலனை யடைவார்கள். அன்றியும் தன்னைச் சேர்
ஏழுகோத்திரங்களையும் நூறு குலத்திலுள்ளாரையும் பா
கத்தினின்றும் கரைசேர்க்கிறவர்கள் இரணிய சிரார்த்தமு
விருஷபோதசர்ஜனமும் செய்கிறவர் தன் வம்சத்தையு
தன்னைச்சார்ந்த நூறு வம்சங்களையும் பாதகத்தினின்று
கரைசேர்த்து ஒருகோடி சிராத்தம் கங்கைக்கரையில் கா
க்ஷேத்திரத்தில் செய்தபலனை யடைகிறார்கள்.

இத்தீர்த்தத்தில் மாசிமாதம் மகத்திலும் சித்திரைய
தத்திலும் கார்த்திகை சோமவாரத்திலும்அமாவாசை பௌ
ணமிசூரிய சந்திர கிரணத்திலும் உத்தராயண தக்ஷிணாய
புண்ணியகாலத்திலும் விஷு—புண்ணிய காலத்திலும் மாத
பிறப்புகளிலும் தேய்பிறை அஷ்டமியிலும் சிவராத்திரி
லும் சுக்கிரவாரத்திலும் கபில சஷ்டியிலும் ஸ்நானம் செய்
பிதுர் தர்ப்பணம் செய்யவேண்டியது. பரம உத்தமமா
மகாமக தீர்த்தத்தில் நீராடுவாரானால் நினைத்த பலனை யடை

வார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

## இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் முக்தியடைந்தவர்களில் முதலாவது, அஸ்தியின் வரலாறு.

சவுராஷ்டிரதேசத்தில் முதல்வருணத்தில் சௌநக வம்சத்தில் சகலசாஸ்திரங்களையும் செவ்வையாக ஓதி உணர்ந்த வேங்கடாசாரியர் என்னும் பெயருடைய ஒரு பிராமணர் இருந்தார். அவருக்குச் சுசீலன் என்றொரு பிள்ளையிருந்தான். அப்பிள்ளை மாதா பிதா பந்துக்கள் முதலியவர்களால் கொண்டாடப்பட்டவனாய்த் தக்க காலத்தில் உபநயனஞ்செய்யப்பட்டுத் தகப்பனால் மந்திரோபதேசத்தை அடைந்து ஒரு கன்னிகையையும் விவாகம் செய்யப்பெற்றான். இதுவுமன்றித் தகப்பனால் எல்லா ஆகமங்களையும் பதினெண் புராணங்களையும் பதினெட்டு உபபுராணங்களையும் முப்பத்தாறு ஸ்மிருதிகளையும் சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் சோதிடம் கல்பம் என்னும் ஆறு அங்கங்களோடு கூடிய நான்கு வேதங்களையும் செவ்வையாக ஓதி வைக்கப்பெற்று நன் மார்க்கத்திலும் நடத்தப்பட்டான். உலகத்தில் அவனுக்குச் சமானமானவர் வித்துவான்களுள் ஒருவரும் இல்லை. அரசர்களுக்கு எக்கியம் தானம் இவைகளைச் செய்விப்பவனும் அவைகளைப்பற்றி விரிவாய் எடுத்துச்சொல்லக் கூடியவனும் இவனொருவனே. தானும் எக்கியாகாதிகளைச்செய்து அநேகருக்கு வேதாந்த உபதேசஞ்செய்வித்துத் தகப்பனிலும் எண்மடங்கு அதிக ஞானமுள்ளவனாயிருந்தான். இவ்வாறு இருக்கும் நாளில் ஒருநாள் அவன் தகப்பன் காலகதியால் மறுதேசம் சென்றான். தகப்பனிறந்ததும் அவன் தாய் தன் புருஷனுடன் உடன்கட்டையேற முயன்றாள். கிராமத்திலுள்ளாரும் அவள் பிள்ளையும் பந்துக்களும் அரசனும் தடுக்கும்பொழுது அவர்களுள் தன்மகனுக்கு அடியில் வருமாறு சொல்லத்தொடங்கினாள். குழந்தாய்! உடன் கட்டையேறுவதால் உண்டாகும் புண்ணியம் சுவர்க்கத்தையும் முக்தியையும் கொடுக்கத் தகுந்தது. குலமகட்குத் தெய்வங்கொழுநனே என்னும் நீதிவாக்கியப்படி ஸ்திரீகளுக்கு கணவனே தெய்வமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

குருவும் எஜமானும் சிநேகனும் பந்துவும் மா
பிதாவும் எல்லாம் கணவனே. சிவன், நாராயண
முதலிய தேவர்களும் அவனே நியமவிரதம், புண்ணிய
முதலியவையாவும் கணவனுக்குச்செய்யும் தொண்டிலு
வேறில்லை. கணவனுக்குச் செய்யும்வேலையே தருமம். பிரம
விஷ்ணு சிவ இந்திராதி தேவர்களும் முனிகள் சித்தர் க
ருவர் நாயகர் யக்ஷர் கின்னரர் முதலியவர்களும் கணவனிட
த்தில் அன்புள்ள ஸ்திரீகளுக்குத் தாமும்அன்புள்ளவராயிரு
க்கின்றனர். கணவனிடத்தில் கோபமுடையஸ்திரீகளுக்குஅ
ரவுரவாதிநகரங்களை உடனே கொடுக்கின்றார்கள். ஸ்திரீக
கணவனிருக்கும்பொழுது நல்ல மங்களமுடையவர்களாகவு
இறந்தபொழுது அமங்கலத்தையுடைய விதவைகளாகவு
ஆகிறார்கள். விதவைகளைக் கண்டால் எல்லாக்காரியங்களு
நாசமடைகின்றன என்றும் ஸுமங்கிலியைக்கண்டால் எ
லாக்காரியங்களும் கைகூடுகின்றனவென்றும் சகுன சாஸ்
ரத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றன. விதவையானவள் எ
விதமான நிந்தைக்கும் உட்பட்டவளாகி உலகத்தாரால் த
ளப்பட்டவளாகிறாள். கணவனிழந்த ஸ்திரீக்கு நூறு பிள்ளை
களிருந்தாலும் அவர்களாலும் தாய் தகப்பன் பந்துக்க
முதலியவர்களாலும் என்னபயன்? "தாயோடறுசுவைபோ
தந்தையொடு கல்விபோம் சேயோடுதான் பெற்ற செல்வ
போம்ஆயவாழ்வு உற்றாருடன்போம் உடன்பிறப்பாற்றோ
வலிபோம் பொற்றொடியோ டெவையும்போம்," என்றபடியே
அன்புள்ள கணவனொருவனிருந்தால் அவள் எல்லாப்பலனை
யும் பூர்ணமாய் அடைகிறாள். கணவனை யிழந்தால் எவற்றை
யும் இழக்கிறாள். கணவனுக்கு அன்புசெய்கிற பெண்டிரும
தகப்பன் சொற்படி நடக்கிற பிள்ளையும் குருவின் கருத்தின்
படி செய்கிற மாணாக்கனும் இராஜ்யத்தை ரட்சிப்பதற்கா
யுத்த முயற்சியோடு கூடிய அரசனும் இவ்வுலகத்தில்
எல்லா ஐசுவரியங்களையுமடைந்து பிறகு ஸாயுச்சியபதவியு
அடைகிறார்கள். கணவனுடன் அநுகமனம்செய்கிற ஸ்திரீ
உலகத்திலுள்ள சகலஜனங்களுக்கும்ஹிதத்தைச்செய்கிறாள்.
பகவான் பிரசன்னமாகி இஷ்டமான பலன்களையெல்லாம்

அவளுக்குக்கொடுக்கிறாள். கணவன் உயிரோடு இருக்குங்காலையில் கணவனாலும், மாமனார் மாமியார் மைத்துனர் முதலியவர்களாலும் அடிக்கப்பட்டாலும் வையப்பட்டாலும் கடினமான மொழிகளால் பீடிக்கப்பட்டாலும், நிந்திக்கப்பட்டாலும் அவர்கள் மொழிக்கு எதிர்மொழியில்லாமல் பொறுமையான மனத்தோடு கூடினவளாய் மனோவாக்குக்காயம் என்கிற திரிகரணங்களாலும் புருஷனைத்தவிர அன்னியர்களை இச்சியாதவளாயும் கணவன் சொற்படி நடப்பதைத்தவிர வேறு தான தருமங்களையும், தீர்த்தஸ்நானங்களையும் க்ஷேத்திர தரிசனங்களையும் விட்டுக்கணவன் சொற்படியே தவறாது நடப்பவளாயுமிருப்பவள் உடன்கட்டையேறுவாளானால் உலகத்திற்கும் தனது பந்துஜனவர்க்கங்களுக்கும் பதினெட்டுவிதமான மகாதர்மங்களையுண்டாக்கிக்கிராமத்திற்கும்இராஜ்யத்திற்கும் விருத்தியைத் தருகிறாள்.

பந்துக்களிடத்தில் விரோதமுள்ளவளாயும் கணவன் சொல்லுக்குப் பதில் சொல்லி அவன் கருத்துக்கு விரோதமாய் நடப்பவளாயும் கணவனைக் கடிந்து பேசுபவளாயும் கண்ணில் தீயெனக் கணவனைக் கோபத்தோடு பார்ப்பவளாயும் அடித்தால் பதில் அடிப்பவளாயும் வைதால் பதில்வைபவளாயும் கணவனை விரோதித்து எப்பொழுதும் குற்றங்கூறித் தூற்றுபவளாயும் அடுத்தவீட்டிற்கு அடிக்கடி போகிறவளாயும்அன்னியபுருஷரோடு பேசுபவளாயும் பிறர் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுத்தான் சிரிப்பவளாயும் கணவனைத்தவிர வேறுப் புருஷர்களுடைய பெருமையை அடிக்கடி கூறுபவளாயும் எப்பொழுதும் தகப்பன் வீட்டில் இருப்பவளாயும் தன் புருஷனைப் பிறர் தூஷிப்பதில் அதிக திருப்தியுள்ளவளாயும் தன் புருஷனுக்கு ஏதாவது தீமைநேர்ந்தால் அதைக் கண்டுமனம்வருந்தாதவளாயும் கணவனுக்கெதிரே உட்காருபவளாயும் படுப்பவளாயும் கணவனுக்குமுன் உண்பவளாயும் இரவில் கணவனுக்குமுன் உறங்கிக்காலை கணவனுக்குப் பின் எழுப்புபவளாயும்தன் வீட்டிலுள்ளசொத்துக்களை ஒருவருக்குந்தெரியாமல் விற்பவளாயும் தந்திரம் யந்திரம் முதலியவைகளை அநுஷ்டிப்பவளாயும் புருஷனை விட்டுப் புண்ணிய

க்ஷேத்திரங்களுக்குச் சென்று புண்ணிய தீர்த்தங்களில் நீ
டுபவளாயும் இவைபோலொத்த வேறு பாவங்களைச் செய்ப
ளாயுமுள்ள அசதியானவள் அனுகமனம் செய்வாளாகில்
இராஜாவுக்கும் இராஜயத்திற்கும் பசுபுத்திரன் முதலியவ
ளுக்கும் நாசமுண்டாகும். ஆதலால் எல்லாவற்றையும் கற்
ணர்ந்தசண்மணியே! உத்தமஸ்திரீகள் தங்கள் கணவனை வி
டுப்பிரியார்கள்.

ஆதலால் நான் அனுகமனஞ்செய்வதைத் தடுக்கலாட
என்னுயிர் நாயகனிறந்தும்யான் இருத்தலின் பயனென்ன
ஈன்றதாய் அடைகின்ற நற்கதியைப் புத்திரர்கள் விலக்
வாரோ என்று தன் மகனைத்தேற்றித் தன்பதிக்குப்பிராண
நெஞ்சில் துடிக்கும்பொழுது தன் கணவன் தேவதிருஷ்
யையுடையவனாயிருப்பதையறிந்துஸ்நானஞ்செய்து மூன்
தரம் நீரருந்தி மஞ்சள் பூ, சந்தனம் முதலியவைகள் பூசி
பூச்சூடி இஷ்டதேவதையையும் குருவையும் நமஸ்கார
செய்து மஞ்சள் குங்குமம் புஷ்பம் முதலியவைகளைக் கை
லாவது துணியிலாவது ஏந்தித் தண்ணீர்விட்டுத் தன
பிராணனைத் தன் கணவன் கையில் சேர்ப்பதாக அவற்றை
கணவன்கையில் ஊற்றிவிட்டுக் கணவன் பாதத்தைத் தவி
வேறுபொருளைச் சிந்தியாமல் சிதையிலேறித் தன் பர்த்த
வுடன் சுவர்க்கத்திற்குச்சென்று தேவர்களால் பூஜிக்கப்பட
டாள். புத்திரனாகிய சத்தியசீலன் தன் மாதாபிதா இருவரு
க்கும் உத்தரகிரியைகளைச்செய்து மகா சிரத்தையுடனு
தீக்ஷையுடனும்வருஷமுடிவுவரையில் உள்ள சிரார்த்ததான
முதலியவைகளைச்செய்து முடித்தான்.

பிறகு தன் தகப்பனைப்போல் நித்தியமும் அனுஷ்ட
னங்களைச்செய்துகொண்டு யக்கிய ஹோமாதி கிருத்தியங்
களையும் விடாதவனாகித் தனது சிஷ்யர்களுக்கும் வேதவேதா
ந்தங்களையும்உபதேசித்துக்கொண்டு அறுசுவை உண்டியையு
பட்சணங்களையும்அடியார்களுக்கு திருப்தியோடுஉண்பித்து
தனது பிதா பரித்த தினம் வருகையில் வேதசாஸ்திரங்களையு
தத்துவசாஸ்திரங்களையும் இதிகாசபுராணங்களையும் அறிந்
பிராமணர்களுக்குப் பூஜையன்ன தானங்களையும் வஸ்திரம் ஆ

ரணம் முதலியவைகளையும் சுத்த ஜலம் நிறைந்த குடங்களையும் பாற்பசுவையும் நிரம்பக்கொடுத்துத்தேசாந்திரிகளுக்கும் அதிதிகளுக்கும் அன்னமளித்து வேண்டியவைகளையுதவிக் காலை மாலை நடுப்பகல் என்னும் முக்காலங்களிலும் சிவன் விஷ்ணு முதலியவர்களுடைய கதைகளைப்படித்துக் கேட்டு நல்லபுண்ணிய காலங்களில் கோதானம் முதலிய தானங்களை விடாது செய்துகொண்டு வரும் சத்தியசீலனுக்கு வாய்ந்த மனைவியே, அஸ்தியாயும் மூர்க்கையாயும் கடுந்த முகத்தோடும் கொடியவார்த்தையோடும் கூடினவளாயும் தன் பதியை அடிக்கடி நிந்தித்துப் பேசுபவளாயும் தன் மாமியினது நல்ல செயல்களைச்செல்லையாக அறிந்தவளாகுலும் ஞானமில்லாதவளாய்த்தன் கணவன் வெளியேபோய் வருமுன்னே முன்ஜன்மத்து ஊழ்வினையால் மிகுந்திருக்கின்ற மோகமுடையவளாதலால் அன்னிய புருஷர்களைச் சேர்ந்து சுகிப்பவளாயும், கணவன்வருங்காலத்தில் பாயில் படுப்பவளாயும் தன் கணவன் புசிக்கவருங்காலத்தில் அவனுக்கு ஆதரவுடன் அன்னமளியாதவளாயும், குற்றமற்ற இனிய சொற்கள் பல சொல்லினும் அவற்றைச் சரியென்று கொள்ளாதவளாயும் நற்காரியங்களையெல்லாம் வெறுத்துக் கெட்ட கருமங்களையே செய்து நடப்பவளாயும், தன் கருமங்களாலேயே தனக்குச் சண்டியென்னும் பெயரையுடையவளாகவுமிருந்தாள். சத்தியசீலன் அவளுக்குத் தக்கபடி கிலகாலமிருந்து தன் பத்தினியின் கெட்ட நடத்தையினலுண்டாகும் மனோவிசாரத்தால் நீங்காத துக்கமுடையவனாகி ஊணுறக்கமின்றி உடல்மெலிந்து இரத்தங்குறைந்து பித்தம் அதிகரித்து பித்தபாண்டுவென்னும் வியாதியினல் இறந்தான் உடனே அவனை எமதூதர்கள் பாசத்தால் கட்டி இழுத்து அஸ்தியின் சங்கமதோஷத்திற்காக நரகத்தில் தள்ளாடினார்கள் அநேக நாள் அந்நரகத்தின் கஷ்டங்களை அனுபவித்தும் பிறகு வேதமோதியிருந்த பெருமையால் எமனால் பூசிக்கப்பட்டுப் புண்ணியலோகத்தை யடைந்து பிறகு காசி ராஜாவுக்குப் பிள்ளையாய்ப்பிறந்து கௌசிகராஜனெனவும் விருஷமித்திரன் எனவும் பெயர்பெற்றுக் கணக்கில்லாத்

தவஞ்செய்து வசிஷ்டர் வாக்கினால் பிரமரிஷி எனவும் பட்டம் பெற்றுச் சுகமடைந்தனன். பிறகு தூர்த்தையாகிய சண்டியும் தனமாமி கணவன் இறந்தகாலத்தில் கணவனை இழந்த கைம்பெண்ணின் நிலைமையைக்குறித்துப் "பதியிழந்த ஸ்திரீ உயிரோடிருப்பதால் பயனில்லையென்று அதிகமான பந்துக்களையும் புத்திரனையும் உடைத்தாயிருந்தாலும் பதியிழந்த ஸ்திரீக்குச் சந்தனம், புஷ்பம், மஞ்சள் குங்குமம்,வஸ்திரம்,ஆபரணம்,உயர்ந்தபடுக்கை,உத்தியானமம் இவைகளால் அவளுக்கு யாதொருபயனில்லையென்று தந்தியில்லாத வீணையும் சகடையில்லாத இரதமும்எப்படி பலனடையாவோ அவைபோலக் கணவனில்லாத ஸ்திரீ யாதொரு சௌக்கியத்தையும் அடையாளென்றும் ஸ்திரீகளுக்குத் தன் பர்த்தாவுக்குச் சமானமான நாதனும் பந்துவும் கிடையாதென்றும், சகலம் இழப்பதைப்பேன்ற துக்கமேதில்லவேயில்லை ஆதலால் நான் என் பர்த்தாவினுடன் அநுமனம்செய்வேன்" என்றும் சொல்லிய வார்த்தையை முற்றும் மறந்து தான் கணவனை யிழந்ததற்கு மனமகிழ்ந்து நல்லுடை உடுத்திப் பல்பணி பூண்டு தெருவெல்லாம் சஞ்சரிப்பவளாயினள் இவள் கோலத்தைக் கண்டு காமுகராகிய மன்னவரிர் பலரும் வைசியரிற் பலரும் சூத்திரரிற்பலரும் அவளைக்கலந்து இன்பமநுகர்ந்தார்கள். இச்சண்டி இவ்வாறு கெட்டநடத்தை யுடையவளாவதற்குக் காரணம் யாதெனில் வேதவேதாங்க பாரகனும் ஷட்கரும நிர்த்தனுமுள்ள சாகல்யனென்னும் பிராமணோத்தமன் மனையும் தானுமிருந்திருந்த தன் தகப்பன் சிரார்த்த தினத்தில் ஒரு பிராமணனை வரவழைத்து அவனுக்கு நிரம்ப உண்டியளிக்க அப் பிராமணன் சிரார்த்தத்தில் உண்ட பொருளனைத்தையும் கக்கிவிட்டதினால் சிரார்த்தம்நஷ்டமாய்விட்டது அத்தினமே மறுநாட்செய்யச் சிறிதும் சக்தியற்றவனாய் சாகல்யன்சும்மாவிருக்க அதைக்கண்டு பிதிருதேவதைகள் உன்னுடைய குலமும் நீயும் நசிக்கக்கடவாயென்று சாபம் இட்டார்கள். அச் சாபத்தால் அவர்வீடு தீப்பிடித்தது உடனே அவரும் அவர் மனைவியும் அவர்களுக்கு உண்டாயிருந்த பெண்குழந்தையை

யெடுத்துக்கொண்டு தேசாந்திரம் சென்றார்கள். வழியில்
இடி வீழ்ச்சியால் அம்மூத்தோர் இருவரும் இறக்க அக்கு
ழந்தை தனியே அழுதுகொண்டிருந்தது. அதைச் சௌராஷ்
டிரதேசம் காம்பில்லிய பட்டணத்தில் உள்ள பெண்டு இல்
லாத ஓர் பிராமணன் எடுத்துத் தன் தாரபத்துக்களுடைய
குழந்தையென்று சொல்லித் தன் பெண்ணினும் பதின்மடங்
காக வளர்த்துவந்தான் இவ்வாறு வளர்த்து வருநாளில் வேங்
கடாசாரியர் என்னும் பிராமணன் அப்பெண்ணை விபாரித்
துத் தன் பிள்ளையாகிய சத்தியசீலனுக்குக் கலியாணம்
செய்துவைத்தார். ஆகையால் இவள் இவ்வாறு நடக்க இட
முண்டாயிற்று.

இவள் கணவனை இழந்தபிறகும் பலருடனும் காம
இன்பம் அனுபவித்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருநாள்
ஒருகொடிய விஷமபாம்பு தீண்ட இறந்தாள். இறந்தபின்பு
இயமபடர்கள் இவளைக்கட்டி யிழுத்துக்கொண்டுபோய் நர
கத்தில் தள்ள மூன்று மனுவந்தரம் நரகத்தில் மிகுந்தகஷ்
டங்களை யனுபவித்து அதுவும் பத்தாதவளாய்க் கோதாவரி
தீரத்தில் ஓர் பிரம்மாலயத்தில் பணிசெய்துகொண்டிருப்ப
வளாகிய சுப்பிரபை என்னும் தாசிவயற்றில் ஓர் வைசியனுக்
குப் பெண்ணாய்ப்பிறந்து நாளொருமேனியும் பொழுதொரு
வண்ணமுமாக வளர்க்கப்பட்டுப் பருவமடைந்தகாலத்தில்
யோசனை நாறும் புழுமலிந்த புண்ணுடையவளாயும் மூத்திர
கிருச்சிரமென்னும் தீராதவியாதியை உடையவளாயும் எந்
தப்புருஷன் அவளைச்சேருகிறானோ அவனுக்கும் அவ்வியாதி
தொடர்வதால் எல்லாராலும் சீ சீ என் இகழத்தக்கவளாயும்
ஆயினள், இவ்வியாதிக்குக் காரணம் பூர்வஜன்மத்தில் தன்
கணவனுக்கு அடங்காமல் அவனை இகழ்ந்ததேயாகும். இவ்
விதமாக வருந்திக்கொண்டு வருநாளில் ஒருநாள் முன்
சென்மத்தில் தான் சத்தியசீலன் பூஜைசெய்யும்பொழுது
பூஜைக்குத் தீபம் ஸமர்ப்பிக்கத் தீபங்கொண்டுவந்த புண்
ணியத்தால் கோதாவரி தீரத்திலிருந்து கும்பகோணத்தில்
மகாமக உற்சவம் நடப்பதைக் கேள்விப்புற்று அவ்வுற்சவக்
கடைநாளி லம்மகாமகதீர்த்தத்தில் நீராடுவதின் பொருட்டுச்

செல்லும் பலபிராமணக் கூட்டத்தின் சேர்க்கையையுற்று அவள் எந்த வைத்தியராலும் தீர்க்கமுடியாத தீராதநோயுற்றவளாய் இருப்பதை அவர்களுக்கு அறிவிக்க அவர்கள் பெண்ணே! நீ எங்களுடன்வந்து கும்பகோணத்திலுள்ள மகாமகக்குளத்தில் முழுகுவாயானால் நீ எல்லாநோயினின்றும் தீர்ந்து பரிசுத்த சரீரத்தை யுடையவளாவாய் என்று சொன்னார்கள். அவளும் கருமவசத்தால் பாபம்நீங்குங்காலம் வந்துவிட்டலால் அவர்சொல்லுக் கிணங்கிக் கும்பகோணஞ் சென்று மகாமகதீர்த்தத்திலும் ஹேமதீர்த்தத்திலும் காவிரியிலும் விதிப்படி நீராடித் தீர்த்ததேவதைகளை வணங்கி அத்தீர்த்தங்களை வணங்கி வலம்வந்து அத்தலத்திலுள்ள பனிரு தேவாலயங்களிலும் சுற்றிலுமுள்ளபதினெண் க்ஷேத்திரங்களிலுமுள்ள சிவவிஷ்ணு மூர்த்திகளைத் தரிசித்து இறுதியில் முக்தியடைந்தாள்.

சிருதவீரியன் ஆறுபிள்ளைகளை யடைந்தது.

முற்காலத்தில் ஹேஹயன் என்று ஒரு அரசன் இருந்தான் அவன் மிகவும் சாந்தவனாகவும், ஆசிரியர்களால் நல்வழிப் படுத்தப்பட்டவனாகவும், எல்லோருக்கும் பிரியனாகவும், பொறுமையுற்றவனாகவும், நீதியுற்றவனாகவும், திரவிய சம்பன்னாகவும், விஷ்ணு பக்தி யுள்ளவனாயும், தருமத்தைச் செய்பவனாகவும், எப்பொழுதும்பகவத் கதைகளையே கேட்க ஆவலுற்றவனாயும், விஷ்ணுவையேபசிப்பவனாகவும் விஷ்ணு பக்தர்களிடத்தில் நீங்காத பக்தியுடையனாயும், ஓயாமல் விஷ்ணு நாமங்களைச்சொல்பவனாயும் இருந்தான். இவன் மனைவியோடு சென்றால் சேதிதேசாதிபதியின் மகள், நல்ல சுப இலக்ஷணங்களோடு கூடிய அவயவங்களுடையாள், கணவனிடத்தில் பக்தியுள்ளவள், கணவனுக்கே தொண்டுசெய்யும் வேலையுள்ளாள், கணவன் சொற்படி நடப்பவள், கணவனைத்தவிர வேறு தெய்வத்தைக் கனவிலுமறியாதவள். கணவன் ஆயுள் விருத்தியாவதற்குச் சண்டிகாதேவியைப் பூசிப்பவள் தன்கணவன் பொருள் விருத்தியையும் இராச்சிய விருத்தியையும் சத்துருநாசத்தையும் வேண்டிச் சூரியனை பூசிப்பவள், கணவனிடத்திலும், தெய்வத்தினிடத்திலு

பிராமணர்களிடத்திலும் மிகுந்த அன்புள்ளவள், சதா சாரதியிலும், தருமமார்க்கத்திலும் நடப்பவள்.

இவ்விருவரும் மதனனும் இரதியும்போலவும், விஷ்ணுவும் இலக்ஷுமியும்போலவும், வசிஷ்டரும் அருந்ததியும்போலவும் ஒற்றுமையுடையவர்களாய் வாழ்ந்துவந்தார்கள். இவர்களுக்கு வம்சவிருத்திக்கு உரிய மகப்பேறில்லை.

ஒருநாள் இவ்விருவரும் நவமணிகளால்இழைக்கப்பெற்றதும் கோடி சூரியன் உதயமானதுபோன்ற காந்தியுடையதும் தனது சிகரங்களால் ஆகாயத்தை யளாவியதுமான உப்பரிகையில் இரத்தினமண்டபத்தில்அன்னத்தூலிகாதல்பசெய்த மஞ்சத்தில்சயனித்துக்கொண்டு அவ்வரண்மனைக்கு வெளிப்புறத்தில் நடக்கின்றவைகளை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவ்வரண்மனையினருகிற் குடியிருந்த ஒருவேளாளனுக்கு நெடுங்காலம் பிள்ளையில்லாமல் பிறகு தெய்வதிருவருளால் அவனுக்கு ஓர் குழந்தை பிறந்தது. அக்குழந்தை அழகில்லா உடலும் பேச்சும் ஒரு காதும் ஒரு கண்ணுமற்றதாயும், செம்பட்டை மயிரும் சிவந்த கண்ணும் கோணற்பல்லும் கிழிந்த உதடும் ஆறு விரல்களையுடைய கைகளும் கோணலாகி வளைந்து விரலற்ற கால்களுமுடையதாயிருந்தது,

இக்குழந்தை மூன்றுவயது வளர்ந்தபிறகு ஒருநாள் பக்கங்களிலுள்ள வேறு சிறு குழந்தைகளோடு சேர்ந்து இராஜவீதியில் அரசன் மாளிகையோரத்தில் விளையாடச் சென்றது.

வெளியே சிலகாரியங்களுக்காக அடுத்த கிராமத்திற்குச் சென்றிருந்த அச்சூத்திரன் வீடுவந்து சேர்ந்ததும் தன் புத்திரனைக்காணாதவனாய்த்தன்மனையாளைநோக்கிப் பெண்ணே எனது உயிருக்குயிரான என் பிள்ளை எங்கே அவனைவிட்டுப் பிரிந்து அரைநாழிகைமேனும் நான் உயிரோடிரேனே போன இடம் சொல்வாய் என்று கேட்டனன்.

அதற்கு அவன் மனைவி ஐயா நான் வீட்டில் காரியத்தின்மேல் நோக்கமாய் இருந்தமையால் எங்கேபோனானென்பது எனக்குத்தெரியாது. ஆனாலும் எங்கேபோயிருப்பான்

இங்குத்தான் இத்தெருவில் எங்கேயாவது விளையாடிக்கொ
டிருப்பான் என்று மறுமொழி சொன்னாள். அம்மொழி
கேட்டு மிகவுங் கோபங்கொண்டு சீச்சீ! உன் ஜன்மம் பா
றது, உனக்கு ஆனவயது கொஞ்சமேனும் பிரயோஜ
லாமல் போயிற்று. உன் வீட்டுக் காரியங்களைக் குப்பை
தள்ளு; என்று அவளை வைது அழுதுகொண்டு தான் வீதி
தேடத்தொடங்கினான். அவன் பத்தினியும் அவனை
தொடர்ந்தாள். வெளியே கிளம்பி என் பிள்ளையைக் க
களா? என் பிள்ளையைக் கண்டீர்களா என்று எதிர்ப்பட
களையெல்லாம் கேட்டுக்கொண்டே வீடுவீடாக நுழை
கண்ட இடங்களெல்லாம் தேடியும் அகப்படாமல், வீதி
லாம் அழுதுகொண்டே திரிந்தும், கோயில்களை
நுழைந்தும், காணுதலால் தன் பெண்சாதியை
புல்லைக் கடகடவென்றிழுத்து அவளை அடிக்கச்சென்
அவளும் பயந்து அழுதுகொண்டே தேடிக்கொண்
தாள்; மறுபடியும் அவளைப்பார்த்து வைதுகொ
அடா குழந்தாய்; என் குலவிளக்கே! நீ என்னைப்பி
ங்குச்சென்றாயடா! என்று தலையில் கைகளைப்பி
கொண்டே அரண்மனையுட் பிரவேசித்தான். அப்பொ
தனது அன்புடைய மனையாளோடும் உப்பரிகையின்
இரத்தினமண்டபத்தில் நவமணிகளால் இழைக்கப்பட்ட
சுவர்ணபரியங்கத்தில் சயனித்துக்கொண்டிருக்கும் வே
ராஜாவானவன் (அடே குழந்தாய்! அடே குழந்தாய்) எ
புலம்பிக்கொண்டு தன்பெண்ஜாதியோடும் அரண்மனை
வருபவனை உற்று நோக்கி உடனே தன்மனையாளைப்பா
(என் அன்னமே? இச்சூத்திரனையும் இவனது மனை
யும் பார், அவனோ மிக்க வயதுசென்றவனாயும், கு
யும் நரைதிரை முதலியவைகளால் மூடப்பட்டபெருங்கி
யாயும் மிகக் கரியநிறமும் விகாரரூபமும் உடையவ
இருக்கிறாள். இவளுக்குக்குழந்தை எப்படியுண்டாயி
நல்லது இவர்கள் குழந்தை நமது அரண்மனைக்கு எ
வந்தது. அழுதுகொண்டு இவர்கள் இங்கே எங்கே
றார்கள் பார்? அழுதுகொண்டு போகிறவர்களை அ

பார்த்து (ஏன் அழுகிறீர்கள், உங்களுக்கு உண்டான தீமை யாது) என்று விசாரித்து அவர்களைஉபசரியானுயினும் அவர்கள் கண்ணினின்றொழுகும் நீர் மிக்க கெடுதலையுண்டாக்குமென்பதற்குஞ் சந்தேகமேயில்லை. அந்தஅரசனுடைய வயதும் குறைந்துவிடும் என்பது அரசநீதி என்று இவ்விதமாகப்பேசிக்கொண்டிருக்கையில் அவ்வேளாளன்அங்குசேர்ந்து அந்த உப்பரிகையின் கீழ்ப் பலசிறார்களுடன விளையாடிக்கொண்டிருக்கும் தனது புத்திரனைக்கண்டு மிக்கசந்தோஷமுடையவனாய் என் குழந்தாய்! என்று கதறிக் குழந்தையை எடுத்து மார்புறத்தழுவி பிள்ளையைக்கண்டதாலுண்டாகிய ஆநந்தக்கண்ணீரால் அக்குழந்தையை மஞ்சனமாட்டி அடிக்கடி உச்சிமோந்து செவ்வையாய்க்கட்டிக்கொண்டான். பிறகு தனது கைகளால் அக்குழந்தையைச் செவ்வையாத்தடவி உடம்பிலுள்ள தூசியெல்லாந் துடைத்து அப்பா நானுடலெடுத்த பயன்இப்பொழுதுதானடைந்தேன், எனதுகுலமும் இப்பொழுது நற்குலமாயிற்று. இப்பொழுதுதான் எனது பிதுருதேவதைகள் திருப்தியடைந்தார்கள். எனது விரதங்களெல்லாம் இப்பொழுதான் பலித்தன இப்பொழுதுதான் அப்பா எனக்கு மங்களமுண்டாயிற்று நான் செய்த தெய்வ பூஜைகளெல்லாம் இப்பொழுதான் பலனுடையவாயின. எனது தபசும் இப்பொழுதுதான் பலனுடையதாயிற்று. உன்னை நான் இப்பொழுது காணுவிடின் இறந்துவிடுவேன். என்பது திண்ணம். நீதான் எனது உயிர் அப்பா, அமுதம் உண்டவர்கள் எவ்வளவு சந்தோஷிப்பார்களோ, அவ்வளவு சந்தோஷம் இப்பொழுதுதான் உண்டாகின்றதப்பா என்று சொல்லிக்கொண்டு தன் பிள்ளையைத் தோளிற் றூக்கிக்கொண்டு தன் பெண்சாதியும் தானுமாய்த் தன்வீட்டுக்குள் நுழையும்பொழுது (பிள்ளையில்லாதவனுடைய குலமும் அவனது தனமும் அவனது விரதமும் வீடும் பூமியும் கீர்த்தியும் நல்ல மந்திர பூஜைகளும் பயன் இல்லாமற் போய்விடும்) என்று தன் பெண்சாதியினிடம் சொல்லிக்கொண்டே நுழைந்தான்.

தன் மனைவியோடு மாளிகையின்மீதிருந்து இம்மொழி

யைக் கேள்வியுற்ற அரசன் மிகுந்தகவலையுடன் தன் மனை
யாளை நோக்கி (எனது உயிருக்குயிரான இன்னமுதே? என
மனது தீயிலிட்ட மெழுகுபோலும், வெண்ணெய்போலு
தவிக்கின்றது. பிள்ளையில்லாக்குறையாலும் இச்சூத்திர
மொழியாலும் நான் வருத்தப்படுகிறேன். எனக்கு இராச்
யத்திலும் உன் சேர்க்கையிலும் வேடிக்கையிலும் பரிகா
மொழியிலும் பீதாம்பரச் முதலிய உடையிலும் உனது அ
ன்னம்போன்ற நடையிலும் இரத்தினங்களிழைத்த அணியிலு
மனம் நாடவில்லை.

இதற்கு முந்தியே இப்பிள்ளையில்லாக் குறையால் நா
மனம்வருந்தியதுண்டு. இப்பொழுது இச்சூத்திரன் மொ
என்மனதை நிரம்பவருத்துகின்றது. நான்உயிரோடிருந்து
என்ன செத்தாலென்ன இரண்டும் சரிதான். எனது அழகி
அரண்மனை மிகுந்த செல்வம் நாடு நகரம் வஸ்திரம் பூஷண
இவைகளால் எனக்கென்ன பயன். நமது முன்னோர்களுக்
வம்சவிருத்திக்குச் சந்ததிகளிருந்தன. இப்பொழுதுநமக்கே
அது இல்லை. பிள்ளையில்லாதவனுடைய கதியை முன்னமே
நான் சாஸ்திரங்களால் செவ்வையாய் அறிந்திருந்தபோ
லும் இப்பொழுதும் இவ்வேளாளனாலும் நினைக்கப்பட்
பிதுரு தேவதைகள் பிள்ளையில்லாத தன் வம்சத்
தைக் கண்டால் மிகவும் வருந்துகிறார்கள் என்றும் பிள்ளை
யில்லாப் பெரும்பாவிக்குச் சுவர்க்கத்திலும் நல்வழியி
லையே என்றும் பிள்ளையில்லாதவனுடைய முகத்தைப்பார்
தால் உடனே அப்பாவம் நீங்கச் சூரியனைப்பார்க்கவேண்
மென்றும் இதுவுமன்றிப்பிள்ளையில்லாதவனைத்தொட்டாலு
அவனுடன் பேசினாலும் அநேகதோஷங்களுண்டாகின்றன
ஆகையால் எல்லாக்காரியங்களிலும் அவன் நிந்திக்கப்பட்
வனாகிறான் என்றும் சிரார்த்தத்தில் அவனை அன்னமிட்ட
ரிடத்தால் பிதுருதேவதைகள் நிராசையையுடையவர்களாகி
றார்கள் என்றும் சாஸ்திரம் கூறுகின்றதே.

நான் முன் ஜன்மங்களில் என்ன பெரும்பாதகங்களை
செய்தேனோ, சகலத்திற்கு கர்த்தாவாகிய ராமபதிக்கும்உம
பதிக்கும் ஏதாவது தீங்குசெய்தேனோ வழியில் நிழல் தரு

வதற்காக வைக்கப்பட்ட தோட்டங்களை அழித்தேனோ கோவில்களை இடித்தேனோ குளங்கிணறுகளைத் தூர்த்தேனோ பால்வைத்துக்கொண்டு பசித்த குழந்தைக்கு இல்லையென்றேனோ நல்லபால் தானம்செய்யாமல் நானே குடித்தேனோ நல்லசோலைகளையும் நந்தவனங்களை மழித்தேனோ துளசி வில்வம் முதலியவைகளை வெட்டியொழித்தேனோ விஷ்ணு தருமம் சிவதருமம் என்றால் கெடுக்கப்பட்டனவோ, கோவில்களிலுள்ள தீபங்களை அணைத்தேனோ, அன்னியர்கள் குழந்தைகளைக் கோபத்தாலும் பொறாமையாலும் அடித்தேனோ, பிறர்வைத்திருந்த மதுரமான பழங்களைத் திருடினேனோ, மரஞ்செடிகளைப் பின்பு அவற்றின் கன்றுகள் உண்டாகாமற் போகும்படி வெட்டினேனோ, பாம்பின் முட்டைகளை உடைத்தேனோ, பாம்பைத்தான் அடித்தேனோ, கலசத்தை உடைத்தேனோ, அல்லது திருடினேனோ, அல்லது அவைகளால் கட்டடம் கட்டினேனோ, பொன்னாலும் வெள்ளியாலுமுள்ள நாகத்தைத்தான் திருடினேனோ, இப்படிச் சந்ததி இல்லாமற் போகும்படியான பாதகம் என்னசெய்தேனென்று தெரியவில்லையே என்பாவாய்! நான் எங்கேபோவேன் என்னகாரியம் செய்வேன், எப்படி எனக்குப் பிள்ளையுண்டாகும் பிள்ளையில்லாதவனைத்தேவர்களும் பிதுர்க்களும் மனிதர்களும் நிந்திப்பார்களே இந்நிந்தனையை நான் எப்படித் தவிர்ப்பேன் நாலாம் வருணத்தில் பிறந்த ஓர் வேளாளன் மிக்க குரூபியாய் ஒருகாதும் கண்ணும் நாசியுமற்ற பிள்ளையைக்கண்டு என்ன சந்தோஷத்துடன் என்னென்ன சொன்னான் பார்த்துக்கொண்டிருந்தாயா, இந்த எளியவன் மிக்க குரூபியினிடத்தில் இவ்வளவு அன்புள்ளவனாயிருப்பதை யோசித்தால் சக்கிரவர்த்தியாகவர்த்தியாகவிருந்து அரசாளத்தக்க மக்கள் இல்லாத என் துக்கம் ஆறக்கூடியதாக இருக்குமா? என்னருமைக்கண்மணியே அவரவர்கள் வயிற்றிலுதித்த பிள்ளையைக்கொண்டே ஹரியானவர் அவரவர்களுக்குச் சகல சந்தோஷத்தையும் உண்டாக்குகிறார். புத் என்னும் நரகத்தினின்றும் காப்பாற்றப்படுவதால் அல்லவோ புத்திரனென்று பெயருண்டாயிற்று. ஆகையால் மனிதர்களுக்குச் சௌக்கி

யத்தையுண்டாகக் கூடியபொருள் பதினான்கு உலகத்திலும்
பிள்ளையை விடவேறில்லை. பெரிய இராச்சியமும் தனமும்
இரத்தினங்களும் இரத்தினாபரணங்களும், வீடும், கிராமங்
களும் நான்குவித சேனைகளும் எனக்கு எதற்காகவேண்டும்.
அறுசுவையில்லாத உண்டியும், வாசனையில்லாத மலரும்
போலப் பிள்ளையில்லாத ஜன்மம் பயனற்றதாதலால் இந்
ஜன்மமும் எனக்கு வேம்பாகவே இருக்கிறது. எனது நல்
குலத்தாலும் குணத்தாலும் விரதத்தாலும் ரூபத்தாலும்
அன்புள்ளமனையாலும், தருமத்தாலும் சந்தோஷத்தாலும்
கணக்கற்ற பொருளைச் சேர்த்ததாலும் தேவபூஜையாலும்
புண்ணியகாலத்தில் நீராடுவதாலும் புண்ணிய தீர்த்தங்களில்
முழுகுவதாலும் எனக்கு யாதொரு பயனுமில்லை. விளக்கில்
லாவீடுபோன்றது பிள்ளையில்லாக் குலம் பிள்ளையில்லாதவ
னுக்கு உலகமுழுவதும் இருட்டுத்தான் என்று தன் பெண்
சாதியோடு குறைகூறலும் அவளும் துக்கத்தையுடையவ
ளானாள். அவர்கள் படுக்கை அன்று இருவருக்கும் முள்ளா
கவே இருந்தது. அதுமுதல் அவர்கள் சரீரம் கோடைகாலத்
துக் குளம்வற்றுவதுபோல இளைக்க வாரம்பித்தது. இராச்
சியத்தில் விசாரணைகள் சரியாக நடந்தேறவில்லை. ஜனங்களெ
ல்லாம் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்
கும்பொழுது முக்காலங்களும் உணரும் சாகல்லிய மகரிஷி
யாசகம் செய்வதற்காகத் தனம்வேண்டி இவ்வரசனை எதிர்பார்
த்துக்கொண்டு அரண்மனைக்குவந்தார். வந்தவரை அரசன்
கண்டு எழுந்து சென்று எதிர்கொண்டு அழைத்துவந்து
இரத்தின பீடத்தில் உட்காரவைத்து அர்க்கிய பாத்தியாச
மனீயமளித்து, ஹே, மகாரிஷியே, தாங்கள் இந்நகரம் தேடி
வந்தது யான் செய்ததவமோ என் முன்னோர்கள்செய்த
தவமோ நாட்டார்செய்தவமோயார்செய்ததவமோ அறியேன்.
தங்கள்வரவு எனக்கு நல்வரவாயிற்று என்று உபசரித்தான்.
உடனே சாகல்லிய இருஷி மகாராஜனே, உன்னுடைய புத்திர
மித்திர களத்திராதிகளான பந்துவர்க்கங்களும் தேசமும் மந்
திரிபிரதானிகளும் சேனைகளும் சவுக்கியமா? நான் சரஸ்வதி
நதிக்கரையில் மிக்கதிரவியம் செல்வழியக்கூடிய ஒரு யாகம்

செய்ய ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் மூன்றுநாள் தான் காலம் இருக்கிறது. அக்காலத்திற்குள் நான் மூன்றுகோடி பொன்னுடன் அச்சாகவ்தி நதிக்கரைக்குப்போகவேண்டும் விஷயக் காலதாமதம் செய்யலாகாது. உன்னண்டைவந்தால் வேண்டுமளவு தனம் கிடைக்கும் என்று உத்தேசித்து வந்தேன் எனக்கேட்டனன், அரசன் வணங்கி நின்று முனிச்சிரேஷ்ட, தங்கள்வார்த்தை பரிகாசவார்த்தைபோ லிருக்கின்றது. அப்படி இல்லையாயின் பாவியான என்முன்புவந்தபடியால் தங்களுக்கு முக்காலமும் உணரும்வல்லமை குறைந்திருக்கவேண்டும் என்றுகூற, இருஷி அரசே, எனதுஉக்தி பரிகாசமன்று அரசனிடத்திலும் சந்திரனிடத்திலும் சூரியனிடத்திலும் பருவதத்தினிடத்திலும் ஜலத்திலும் ஆகாசமார்க்கத்திலும் ஹரிவசிக்கிறார். ஆகையால் உன்னுடைய சந்நிதானத்தில் ஈனபுத்தி ஒருகாலும் குறையாது. யோசிக்காமல் ஏதாவது சொல்லியிருக்கலாம் என்று ஆசமனம்செய்து ஒரு முகூர்த்தம் தியானத்திலிருந்து பிறகு அரசனை நோக்கி அரசனே உனது முன்ஜன்மபாபத்தால் பிள்ளையுண்டாவதற்குத் தடையுண்டா யிருக்கிறது. ஆதலால் உன்மனையில் பிள்ளையில்லை. இதற்கு நீ கவலைப்படவேண்டாம். உனக்கு ஸர்வேச்சுவரன் கிருபையால் ஆறு புத்திரர்கள் உண்டாகப்போகிறார்கள். அவர்கள் சூரியசந்திரர்கள் உள்ள வரையிலும் கீர்த்தியுடையவர்களா யிருப்பார்கள் என்று கூறினார் அரசன் ஆனந்தத்தினாலே கண்ணினின்றும் நீர்ததும்ப என் ஆண்டவரே! உங்களைத்தவிர எனக்கு வேறுகதியில்லை. உங்களாற்றான் எனக்குப்புத்திரன் உண்டாகாதிருக்கும் பாபம் நீங்கவேண்டும். எனக்கு என்னகாரணத்தினாலே புத்திரன் உண்டாவதற்குத் தடை உண்டாயிற்று. அதைச் செவ்வையாய் அடியேனுக்குச் சொல்லி யருளவேண்டும். உன்னுடைய பிள்ளை முதலானவர்கள் சவுக்கியமா? என்று கேட்டீர்களே குலம்விளங்க எனக்குப்பிள்ளையில்லையே! எனக்குப் பிள்ளையில்லாமற்போகும்படி முன்ஜன்மத்தில் அன்பில்லாமல் அரிஹரன் பூஜையைச்செய்தேனோ, கற்பை உடைய பெண்டிர்கள் மனம் வருந்தும்படி பழிச்சொற்களைச் சொன்னேனோ

அல்லது அவர்களுடைய கற்பை அழித்தேனோ, அன்புடன் கடவுளைப் பூசிப்பவர்களை அதட்டி அடித்தேனோ! தரும மார்க்கத்தில் நடக்கின்றவர்கள் நடுங்கும்படி அவர்களுக்கு ஏதேனும்தீங்குசெய்தேனோ? எல்லாம்வல்லவனைப்பழித்தேனோ! அழுது கொண்டிருக்கின்ற பிள்ளையைப் பார்த்து அதனிடத்து இரக்கம் கொள்ளாது இன்னும் அதை அழும்படியாக ஏதேனும் துன்பத்தைச்செய்தேனோ என்னிடத்தில் பிச்சைக்குவந்தவர்களுக்கு இல்லையென்று அவர்களிடத்திலுள்ள பல குறைகளைச்சொல்லி அவர்களைத் தூற்றினேனோ அவர் மனம் வருந்தும்படி நகைத்து இகழ்ந்தேனோ, தேவாலயங்கட்குச்சென்று அவ்வாலயத்திலுள்ள பொருளைத் திருட விரும்பினேனோ பாம்பின் புற்றை அழித்தேனோ, அதன் முட்டைகளை உடைத்தேனோ, வேதத்தை நிந்தித்தேனோ, வேதாந்தத்தின் பொருளை இகழ்ந்தேனோ, வேதமோதியவரை வைதேனோ, ஆகமங்களைப் பழித்தேனோ, அவைகள் எழுதப்பட்டுள்ள புத்தகத்தை மிதித்தேனோ, பந்துக்கள் பசித்திருக்க அவர்களை மதியாது உண்டேனோ, சுற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் துயர் உண்டாகும்படி வாழ்ந்தேனோ, பசுவை அடித்தேனோ, அது நீர்க்குடிப்பதை விலக்கினேனோ, அதை வைதேனோ, உதைத்தேனோ,கன்றுக்குப் பால் விடாமல் அது இளைக்கும்படி கறந்தேனோ, கருப்பத்தை அழித்தேனோ, சிவலிங்கம் சாளக்கிராமம் முதலியவைகளை விற்றேனோ, தாய்தகப்பன்மாருக்குச் செய்யவேண்டிய உத்திரகிரியைகளை விட்டேனோ, ஆலயத்திலிருந்து தகாதகாரியங்களைச் செய்தேனோ, உடல்நடுங்கும்படி எவரையேனும் கோபித்தேனோ, ஆலயத்திலுள்ள நல்ல மரங்களை வெட்டினேனோ, பெற்றோர்களை வருந்தும்படி திட்டி அடித்தேனோ, அவர்களைத் தள்ளாமைகாலத்தில் சோற்றுக்கு வருந்தும்படி விடுத்தேனோ,ஒருவர் பிறருக்குச் செய்கின்ற நன்மையை இடையில் நின்று தடுத்தேனோ, ஈசனிடத்தில் வெறுப்பைப் படைத்தேனோ, அன்னியர் பொருளைத்திருட ஆசைகொண்டேனோ, வேறு என்ன கொடுமைகள் செய்தேனோ, எனக்குத் தோன்றவில்லையே. அவற்றை

அடியேனுக்குச்சொல்லி அப்பாபத்தை நான் போக்கிக்கொள்ளும் வகையை உபதேசித்தருளவேண்டுமென்று அவரைத் தெண்டனிட்டான்.

அப்பொழுது அம்முனிபுங்கவன் ஏ-மகீபதே, நீ புத்திரவானாய்ச், சௌக்கியமாய்ச் சந்தோஷத்தையுடையவனாய் இருப்பதைப்பார்க்க மிகவும் ஆவலுற்றவனாயிருக்கின்றேன். ஆதலால் நீ முன்ஜன்மங்களிற் செய்த பாதகங்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. ஒவ்வொருவரையும் முன் ஏழு ஜன்மங்களிற் செய்த பாதகம் பின்னேழுஜன்மங்கள்வரையில் தொடரும். நீ இந்த ஜன்மத்திற்கு முந்தின ஜன்மத்தில் ஒரு பெரிய வைசியன்; மிக்க செல்வவான். தயையில்லாதவன். மிக்க கருமி ஒருவர்க்கும் ஒரு பைசாவும் கொடாத உலோபி, பந்துக்களிடத்தும் பிறரிடத்தும் தெய்வத்தினிடத்தும் அன்பில்லாதவன், கொஞ்சமேனும் பச்சாதாபம் இல்லாதவன். இக்குணங்களால் பரிபூரணனாய் இருக்கும்பொழுது ஒருநாள் உன்கடையில் நல்ல உருசியுள்ள பக்குவமான வாழைப்பழம் முதலிய பழங்கள் நிரம்பவைக்கப்பட்டிருந்தன. அப்பழங்களைத் தின்பதற்காக ஒருபூனை வந்து அப்பழங்களை மோந்துகொண்டிருக்கும்பொழுது மிக்க கோபத்தோடு பல்லைக் கடகடவென்று கடித்துக்கொண்டு உன்பெண்சாதி கொண்டுவந்துகொடுத்தகோடரியால் நீ அதை அடித்துக்கொன்றாய். அதைக்கண்ட அக்கடையிலுள்ளார் எல்லாரும் கண்ணை இருகரங்களாலும் மூடிக்கொண்டு ஹரி ஹரி-சிவ-சிவாவென்று ஈசுவரநாமங்களை உச்சரித்து மிக்க பயமடைந்தார்கள்.

நீ அப்பொழுது அக்கொலையால் பச்சாத்தாபம் அடையாமலும் அப்பாபத்தைப் போக்கிக்கொள்ள நினையாமலும், யாதொரு முயற்சியுஞ்செய்யாது இருந்த தோஷத்தால் அற்ப ஆயுள் உடையவனாய், நீ ஏழு ஜென்மத்திற்குமுன் ஸ்ரீ சைலமென்னும் மலையாம் திவ்வியமான இரத்தின மண்டபம் ஒன்றுகட்டிவைத்தாய். அந்தப் புண்ணியவசத்தால் அரசனாய். ஆயினும் இப்பாதகத்தை நிவர்த்தித்துக் கொள்ளக் காலம் வந்துவிட்டது. உன் பாதகங்கள் தொலைந்தன

வென்றுனினை. இப்பொழுது இன்னும்மாதம் ஆறில் மகாமக உற்சவம் கும்பகோணத்தில் நடக்கப்போகிறது; அந்த உற்சவத்தின் கடைசிநாளில் மகாமக தீர்த்தத்தில் முழுகினால் சகலமான பாதகங்களினின்றும் நீங்கிப் பரிசுத்தமடைவாய். நானும்எனது யாகத்தைச்சீக்கிரம் முடித்துக்கொண்டு கும்பகோணத்தில் நடக்கப்போகிறது; அந்த உற்சவத்தின்கடைசிநாளில் மகாமக தீர்த்தத்தில் முழுகினால் சகலமான பாதகங்களினின்றும் நீங்கிப் பரிசுத்தவனாவாய். நானும் எனது யாகத்தைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு கும்பகோணம் வந்து சேருவேன். நீ மகாமகத்திற்குமுன் ஆறுமாதம் முதல் நியமத்தோடு கூடியவனாய் இருந்து கன்னியாதீர்த்தத்தில் நீராடுவதாகச் சங்கல்பம் செய்துகொண்டு கும்பகோணத்திற்குச் சென்று மகாமக உற்சவத்துக்குக் கொடியேறுகிற தினத்திற்கு முதல்நாள் அங்குஆர்ப்பணம் செய்யும்பொழுது அக்கன்னியா தீர்த்தத்தில் நீராடி ஒன்பது கன்னிகைகளையும் பூசித்து வணங்கி அரசினடியில் உட்கார்ந்து கோமேதகத்தினால் சழுத்தும் வெள்ளியினால் மீசைரோமமும் இந்திரநீலத்தினால் உடல் முழுவதும் புள்ளியும் பல இரத்தினங்களிழைத்ததாய் வாலும் வைரத்தினால் தாடையும் பத்மராகத்தால் நாசியும் மரகதத்தால் காதும் புஷ்பராகத்தினால் பின் கட்டும் நவமணிகளால் வயிறும் செய்யப்பட்டதாக ஓர் பூனையை அழைத்து அதன் கழுத்தில்எழுபொற்சலங்கைகளைக்கட்டி எழுசாணில் ஒருபொன்கோல் செய்து பூனைமேல் சார்த்தி மகாக்கால்பூஜைசெய்து அதனால் இயமனைத் திருப்திசெய்துவைத்துப் பின்பு நவகன்னியர்களை வணங்கிப் பூஜித்து மகாகலபூஜைசெய்து கன்னிகைகளையும் பூஜைசெய்து பிறகு பிராமணனைப் பூஜைசெய்து கெப்புச் சந்தனம் பூசி இரத்தினதட்சணையும் நீலவர்ணமான இரண்டு வஸ்திரமும் நீல இரத்தினம் வைத்து ஒரு பிராமணனைப் பூசித்து அப்பிராமணனிடத்தில் இக்காலதண்டத்தையும் பூஜையையும் கொடுத்து கன்னியாதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம்செய்யவேண்டும். புத்திரப்பேறு உண்டாகும்படி ஒரு பொன் தட்டில் நல்ல மாதுளம் பழம்வைத்து பொன்வைத்து, பீதாம்பரத்தினால்

முடி வேதமோதி உணர்ந்த பிராமணனுக்குக்கொடுத்து அவன் ஆசிபெறவேண்டும். க்ஷேத்திரவாசிகளாகிய வேத சாஸ்திர முணர்ந்தவருக்குப்பாத்திரமுதலிய பலவுங்கொடுக்க வேண்டும். பிராமணர்களுக்குப் பூர்த்தியாக அன்னம்போட்டு மகாமகஸ்நானவிரதத்தை கிரமப்படி முடித்தால் என் சொற்படியே நீ ஆறு பிள்ளைகளையும் பெறுவாய் என்று சொல்லி விட்டு மூன்றுகோடி பொன்னைப் பெற்றுக்கொண்டு சாகல்லியமுனி யாகத்திற்குச்சென்றார். அரசனும் நியமத்தோடு தனது பத்தினியுடன் சகல பரிவாரங்களையும் அழைத்துக் கொண்டு கும்பகோணம்சென்று சாகல்லியர் உபதேசப்படி விரதத்தை ஆரம்பித்து ஸ்நானஞ்செய்யப் புறப்படுகையில் சாகல்யரிஷி யாகத்தை முடித்துவிட்டுக் கும்பகோணம்வந்து அரசனுக்கு மகாமக தீர்த்தஸ்நானத்தை விதிப்படிசெய் வித்துப் பஞ்சக்குரோசயாத்திரையும் அஷ்டாதச ஸ்தலயாத் திரையும் செய்வித்துக்கோயில்களுக்குஉத்ஸவத்தைச்செய்து முடித்து நியமவிரதத்தோடு தீர்த்தஸ்நானஞ்செய்து மூர்த்தி தரிசனமும் விடாதுசெய்து கொண்டுபன்னிரண்டுமாசம்அவ் வூரிலேயே கிருதவீரியன் வசித்துக்கொண்டிருக்கும்பொழு தே அவன்மனைவிசோபனுங்கிஆயிரம்கரங்களோடுகூடியகார்த்த வீரியனைப் பெற்றனள். காமாங்கிகாம என்பவனையும், மோக நாங்கி சுகர்ப்பனென்பவனையும், சித்திராங்கிகாமக்கியன் என் பவனையும் சித்திரரூபிசுகர்முகன் என்பவனையும் பெற்றார் கள். இதையறிந்தகிருதவீரியன் சாகல்லியர் முதலிய ரிஷிக ளுக்கு வேண்டிய பொன் கொடுத்தான். அப்பதியிலுள்ள தேவாலயங்களுக்கும் செம்பொன்னும் பலமணிகளிழைத்த அணிகளும், பட்டாடையும் கொடுத்துஇன்னும் ஒருவருஷம் அவ்விடத்திலிருந்து பிறகு எல்லோரும் தம் ஊர் சென்று சுகமேவசித்தனர்.

தென்னாட்டில் தாம்பிரபர்ணி தீரத்தில் ஓர்ஊரில் கவுண் டின்னியகோத்திரத்தில் பிறந்து சுருதிஸ்மிருதி இதிஹாஸ புராணங்களைச் செவ்வையாக ஓதி உணர்ந்து யாகாதி கிருத் யங்களைச் செய்து கொண்டுவந்த சுதன்மன்என்னும்பிராமண னுக்குத்தேவசர்மா என்று ஒரு குமாரன் இருந்தான். அவன்

எந்த இடத்தில் அடிவைத்தானோ, அந்த இடத்தில் நல்ல
பயிர்கள் உண்டாகி நல்லதனம்சேரும். ஆகையால் அவன்
மிக்க தனாட்டியனாக இருந்தான். அவனுடைய பாலியத்தில்
அவன் பிதா மரித்ததால், அவன் தாயும் தன் புருஷனுடன்
உடன்சட்டையேறி மரித்தாள். சுதன்மாவானவன் பயிர்செய்
தொழிலால் ஜீவனம் செய்துகொண்டு தன் வீட்டில் கொஞ்ச
காலம் காந்திவதி என்கின்ற தன்பத்தினியோடு அமானுஷிய
மான போகங்களை அனுபவித்துக்கொண்டுவாழ்கையில் முன்
ஜன்மத்தில் செய்த பாபவசத்தால் அவள் இறக்க இரண்டாந்
தாரம் ஓர் பெண்ணை விவாகம்செய்துகொண்டு அவளுடனும்
சுகமடையுங்காலையில் அவளுமிறக்க, மூன்றுந்தாரம் விவாகம்
செய்துகொண்டான். அவளுமப்படியே இறக்க இவன் மிக்க
தனவான் ஆதலால் நாலாவதுதடவையும் ஐந்தாந்தடவையும்
விவாகம் செய்துகொள்ள அவளும் இறந்ததையும், கவனி
யாது, ஆறுந்தடவையாகச் சித்திராங்கியென்னும் அருந்ததிக்
குச் சமானமான கற்புடைய பெண் ஒருத்தியை விவாகம்
செய்துகொண்டு சுகமாக இருக்கும்நாளில் அழகில் மன்மத
னைப் பழிக்கும்படியான ஒரு பிள்ளை பிறந்து மூன்று மாதம்
வளர்ந்து பிறகு இறந்தது. இவ்வாறே அவள் வயிற்றில் பதி
னெட்டுப் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்து இவர்கள்
செய்த பாபவசத்தால் இறந்தன. இம்மாதிரியாகப் பிள்ளைகள்
பிறந்து இறந்துபோகும்தோஷத்தை, நிவர்த்திசெய்ய, சுதன்
மன் அநேக சாந்திஹோமங்களும், ஸேதுஸ்நான முதலிய
வைகளும், இருபதுதரம் செய்தான்நாகப்பிரதிஷ்டை செய்து
பக்தியோடு நாகராஜபலியும் கொடுத்தான். தாம்பிரபர்ணி
தீரத்திலுள்ள அநேகம் கோவில்களில் அநேக தருமங்களைச்
செய்துவைத்தான். தாம்பிரபர்ணிநதியில்விதிப்படி ஸ்நானம்
பண்ணினான். இராமாயணம் பாரதம் பாகவதம் ஸ்காந்தம்
ஹாலாஸ்யமுதலிய புராணங்களைப்பக்திசிரத்தையுடன் படிக்
கக்கேட்டுத் தானும் படித்தான்- அநேகம் பிராமணர்களைப்
பூஜை செய்தான். சைவவைஷ்ணவவிரதங்களில்அநேக விர
தங்களை விதிப்படி அனுசரித்தான். அவன் பூர்வஜன்மபுண்
ணியத்தால் அவன் பயிர்களெல்லாம் நல்லபலனைத்

ந்தனவாதலால் குபேரனுக்குச்சமானமான செல்வத்தோடு கூடியிருந்தான். ஆயினும் ஜன்மாந்திர தோஷத்தால் வம்ச விருத்திக்குப் பிள்ளையில்லாதிருந்தமையைநோக்கி அடியில் வருமாறு புலம்பலுற்றான். நான் கொஞ்சகாலம் பெண்டிழந்தவனாகவிருந்தேன் இப்பொழுது நெடுங்காலம் பிள்ளையில்லாதவனாய்விட்டேன். இது உலகத்தாரால் நிந்திக்கத்தக்கதுதானே, பிள்ளையில்லாதவனாகிய எனது ஜன்மமும் எனது விரதமும் பாழாயினதருமமும் வீண். தன்னுடைய தனதானியங்களால் எனக்கு என்னபயன். என்று மனம்வாடி எல்லாவற்றிலும் வெறுப்புடையவனாயினான், எனக்கோவயதும் ஐம்பத்தைந்து ஆய்விட்டது. இதுவரையில் கிழத்தனமடைந்த எனக்குயாதொருபிள்ளையும் உயிரோடு பிழைத்திருக்கவில்லை இனியெனக்குத்தன் வீடும் நிலமும் தனமும் தானியமும் என்ன பயனைத்தரப்போகின்றன? நான் என்னுடைய பத்னியோடு யாத்திரைசெய்ய ஆரம்பிக்கிறேன். எனக்குப் பிள்ளை உண்டாகிறகாலம் வரையில் அநேகவனங்களிலும் மலைகளிலும் சஞ்சரித்துக்கொண்டு பூமியைப் பிரதட்சணம் செய்கிறேன், என்று துணிந்து அறுசுவை உண்டியையும் தாம்பூலத்தையும் க்ஷௌரம் எண்ணெயிட்டுக்கொள்ளல் பாயிற்படுத்தல், முதலியவைகளைவிட்டு ஒரேதரமுண்டு தரையிற்படுக்கும் விரதத்தைக் கைக்கொண்டு கொஞ்சம் பொருளைத்தான் எடுத்துக்கொண்டு மற்றவைகளைத் தன்னுடைய மித்திரனாகிய சர்மாவினிடம் ஒப்புவித்து "நான் யாத்திரையினின்றும் திரும்பி வருகிறவரையில் நீயே எல்லாவற்றையும் அநுபவித்துக்கொண்டிருப்பாய், நான் பிள்ளையில்லாமல் திரும்புவேனானால், எல்லாம் உன்னுடைய சொத்துகள் தான். இதற்கு எல்லாம்வல்லவனாகிய பரமபதியும் உமாகாந்தனாகிய பரமசிவனும் தாமிரபர்ணி நதியும் இரவு பகலும், கிரகதேவதைகளும் சாட்சியாகவிருக்கிறார்கள். இதற்குயாதொருசந்தேகமுமில்லை என்றுசொல்லி, எல்லாப்பொருளையும் அவனிடத்தில் ஒப்புவித்துவிட்டுத்தானும் தன் மனையாளுமாக யாத்திரைக்குச் சென்று நாடு நகரங்களைக் கடந்து அறுபத்தைந்து நாட்கள் சென்றபிறகு, பூர்வஜன்மத்தின் கருமவசத்தால் கலசத்திற்

பிறந்த அகத்தியருடைய சீடர்களுள் ஒருவரான முக்காலங்களையும் உணரும் குசிகன் என்னும் ரிஷியை வழியில்கண்டு, அவரைவணங்கி நின்று இருவரும் தங்கள் தங்களுடைய விருத்தாந்தங்களைச்செவ்வையாக அவரிடத்திற்சொன்னார்கள் அம்முனிபுங்கவர் ஓய் விப்பிரோத்தமா நீபல பெண்டிரை இழந்ததையும் பலபிள்ளைகளை இழந்ததையும் நான் செவ்வையாய் அறிவேன். நீயே யல்லாமல் வேறல்ல. அவற்றைச் சொல்லுவேன். கேட்பாயாக, நீ இதற்கு முன்ஜன்மத்தில் வேதபுரி என்னும் பட்டணத்தில் பிறந்த ஒரு பிராமணன் வேதசாஸ்திரங்களை நன்றாக அறிந்தவன் நீதியின்படி நடப்பவன். நீ இருந்த கிராமத்தில் ஒருநாள் ஒரு கண்ணன் திருக்கோயில் பெருமழையால் இடிந்துவிட்டது. அதையாசகமெடுத்து நீ கட்டுவித்தாய். அந்தப்புண்ணிய வசத்தால் புண்ணிய க்ஷேத்திரத்தில் பிறந்து பெரிய சம்பன்னனாய் நீ செய்த புண்ணிய பலத்தைச் சொன்னேன். நீகளத்திர மற்றவனாய் ஆனதற்குக் காரணம் சொல்லுவேன் கேள். அதற்கு முன்ஜன்மத்தில், நீகுண்டின புரமென்னும் பட்டணத்தில் ஒரு பிராமணனாய்ப் பிறந்திருந்தாய் அப்பொழுது அதிசுந்திரிகளாகிய பத்துப்பெண்கள் உனக்குப்பிறந்தார்கள். ஒன்பது பெண்களை ஒருபெண்ணுக்கு ஐந்நூறுஐந்நூறு பொன் வீதம் வாங்கிக்கொண்டு நரைத்த கிழவர்களுக்கு விவாகம் செய்துகொடுத்தாய்.

கிழத்தனமிகுந்து உடம்புமுழுமையும் தோல்சுருங்கி தலைமயிரெல்லாம் நரைத்து வெளுத்துக்குறுகிச்சிறுகி உடல் கூனிச்சொற்குதறிக் கயரோகத்தால் அடிக்கடி இருமிக் கோழை மிகக்கக்கி, முக்காலினராய்த் தண்டூன்றிப் பரமாகந்தகாரத்தையும் விளக்கும் பரிதியின் ஒளியும் பற்றாது கண்ணுக்குக் கண்ணாடி யிட்டுப் பலிதராயிருந்ததுமன்றி, இப்பாவையர் பால் ஒருநாளும் ஒருநிமிஷமும் அணுத்துணையும் காமம் அனுபவித்தவர் அல்லர். அப்பெண்கள் நல்லயுவதியர்கள். ஆகையால், அவர்களால் மிக்கதுன்படைந்து தக்க கணவன் இல்லாது வருந்தியதோடு சிலநாட்களுள் தங்கள் புருஷர்களை இழந்தார்கள். புருஷனை இறந்த துக்கத்தால் ஒரு

பெண் தாமிரபர்ணியில் வீழ்ந்து தன் உயிர்விடுத்தாள். மற்ற வர்களோ விஷம்கொண்டு தங்கள் பிராணனைத் துறந்தார்கள். இப்பாதகத்தால் நீ பெண்டிழந்தவனானாய்.

இதுவுமன்றிக் கடைசிப்பெண்ணை, "கன்னிகாதானம் செய்கிறேன். அப்பெண்ணுக்கு நகைபோடவேண்டியதற்கா கக்கொஞ்சம் திரவியம் கொடுத்தால் அப்பெண் யுவதியாய்க் கணவன் வீட்டுக்கு வருங்காலத்தில் அப்பெண்ணை எல்லா விதமான பூஷணங்களுடன் அனுப்புகிறேன்" என்றுசொல்லி அணிகலத்திற்காகவென்று அதிகதிரவியம் பெற்றுக்கொண்டு பெண்ணைக் கன்னிகாதானம்செய்தாய். ஆதலாலொரு மனை யாளுனக்கிருக்கின்றாள். அப்பெண்ணின் கணவனைமோசம் செய்து அத்திரவியத்தை உனது சொந்த ஜனங்களோடு சந்தோஷமாய்ச் செலவழித்து அப்பெண்ணை ஒரு அணிக லனுமின்றிக் கணவன்வீட்டுக்கு அனுப்பினாய். அந்தத்தோஷத் தால் புத்திரர்களை இழந்தாய். இதுவுமன்றித் தாம்பிர பர்ணி தீரத்திலுள்ள விஷ்ணு ஆலயத்தைச் சேர்ந்த நந்தவனத்தி லுள்ள பழத்தையெல்லாம் திருடி உண்டாய். அத்தோஷத் தாலும் உனக்குப்பிள்ளைகள் பிறந்து பிறந்து இறந்தன. ஆயி னும், இப்பாதகங்களைப் போக்குவதற்குத் தக்க வழி உண்டு. அதாவது கும்பகோணத்தில் கன்னியாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் அநேகபாவங்கள் தீருமென்று நான் எனது ஆசிரியர்ஆகிய கும்பமுனியாமல் சொல்லப்பட்டிருக்கிறேன். அந்தத் தீர்த்தத்தில் நீராடும் காலம் ஸிம்மலக்கினத்தில் குருவும் சந்திரனும் சேர்ந்து சூரியன் சேரும் கால மாகையால் அக்காலம் சமீபத்தில் வருகிறது. அப்பொ ழுது குடந்தைக்குச்சென்று அத்தீர்த்தத்தில்நீராடி மகாமக விரதத்தை யனுசரித்து மஞ்சக்குரோசயாத்திரை செய்து விருதசமாபனம் செய்வாயானால் நல்ல புத்திரனையடைவாய். நான் முன் ஜன்மத்தில் இரும்பு திருடியதால் கருங்குட்ட நோய்க்கொண்டு வருந்துகிறேன். இதைத்தீர்த்துக்கொள்ளக் குடந்தையை யடையவேண்டுமென்று ஆசிரியர் அகத்தியர் கூறியிருப்பதால் நானும் வருகின்றேன். கும்பகோணத்திற் குச் செல்வாயாக எனவும் அவ்விருவரும் கும்பகோணம்

சென்று நீராடி ஓர் ஆண்டு அங்குத்தங்கி பிறகு தன்னூருக்குச்சென்று நண்பனிடமிருந்த தன் சொத்துக்களைப் பெற்றுக்கொண்டு நல்ல ஆயுளுள்ள புத்திரர்களை யடைந்து சுகமேயிருந்தனர். குசிகனும் குட்டந்தீர்ந்து நல்ல சரீரத்தை யடைந்து விஜயாசனமென்னும் நகரடைந்து சுமகாக வாழ்ந்திருந்தான்.

நான்காவது வீரவர்மா நற்புத்திரனை யடைந்தது.

முற்காலத்தில் கலிங்கதேசத்தில் வீரவர்மா என்ற ஒரு அரசனிருந்தான் அவன் மிகப்பொருமையும் அதிகமேன்மையும், பாராக்கிரமும் உடையவனும் மன்மதனிலும் அழகு மிகுந்த அங்க இலக்கணங்களை யுடையவனும் எப்பொழுதும் பௌண்டரீகம் அசுவமேதம் முதலிய யாகங்களைச்செய்பவனும் ஓயாமல் ஆதுலர்களுக்கு அன்னமிடுபவனும் நல்ல செய்கைகளிலேயே மனமுடையவனும் புண்ணிய க்ஷேத்திரங்களிற்குப் புண்ணியதீர்த்தங்களுக்கும் செல்லுபவனும் இதிஹாசபுராணாதிகளைப் படிப்பதும் படிக்கக்கேட்பதும் தனக்குப்பொழுது போக்கும் விளையாட்டாகவும் உடையவனும் நல்ல ஜனங்களுடனே பழகுபவனும் எந்தக் காலங்களில் செய்யவேண்டுமோ அவைகளை அப்படியே செய்விப்பவனும் சத்துருக்களாகிய யானைகளுக்குச் சிங்க ஏறுபோன்றவனும் இருந்தான்.

இந்த வீரவர்மாவுக்குச்சுமதியென்று பெயருடைய ஒரு மனைவி உண்டு. அவள் நற்குண நற்செய்கையை உடையவளாயும், கற்பென்பதையே தனக்குப் பூஷணமாக அடைந்தவளாயும், தனது உறவின் முறையார் யாவர்க்கும் தன் கணவனுக்கும் எப்பொழுதும் ஹிதத்தைச்செய்யவேண்டுமென்ற எண்ணத்தையுடையவளாயும், தனது கணவனுக்கும் பந்துக்களுக்கும், ஓயாது தொண்டுசெய்பவளாயும் மங்களத்தைத் தருபவைகளாகிய சந்தனம், குங்குமம், புஷ்பம் இவைகளைத் தரிப்பவளாயும் மஞ்சள் நிரம்பப்பூசிக்கொண்டு நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்துகொள்பவளாயும் தனது கணவனுக்கு மென்மேலும் நன்மையும் ஆயுளும் பெருகவேண்டிச் சந்திரனைப் பூசிப்பவளாயும் சில ஆசாரங்களில் விரதம் இரு

ந்து சிவபூஜைசெய்பவளாயும் சுபமான ஆசாரங்களை யனுசரிப்பவளாயும் சுபமான வஸ்திரங்களைத்தரித்துச்சுபகரர்களானமாதரைப் பூசிப்பவளாயும் சுபகாரியங்களில் ஊக்கமுள்ளவளாயும் எப்பொழுதும் சுபகரமான வார்த்தைகளையே பேசுபவளாயும், தேவதைகளையும் குருக்களையும், நல்லவர்களையும் பெரியோர்களையும், மாமன் மாமி முதலியவர்களையும் நிதம் வணங்குபவளாயும் இருந்தாள். இவ்விருவரும் மதனும்இரதியும் போலும் வசிஷ்டரும் அருந்ததியும் போலும் உமையும் இறையும்போலும் இமையளவும், பிரியாதிருந்து இன்பம் நுகர்ந்து வருங்கால் இவர்களுக்கு ஒருபிள்ளை பிறந்தது, அப்பிள்ளை ஒற்றைக்கண்ணையுடையதும், மயிரற்றதும் அவியாயும் மிகவும் குள்ளமாயும் எல்லாராலும் இகழக்கூடியதாயும் கைகால் முதலியவை கோணலாய் அமைந்து செவியுணர்ச்சியில்லாதிருப்பதால் பேச அறியாத ஊமையாயும் எழுந்திருந்து நடக்முடியாததாயும் இருந்தது. இதைக்கண்டு மிகவும்மனம் வருந்தித் தாய் தந்தையர் இருவரும் பெரியோர்களின் வாக்கியப்படி அனேக தானதருமங்களைச் செய்து விரதங்களை அனுஷ்டித்து வரும்பொழுது பிறகும் அவ்விதமாகவே ஒரு குழந்தை பிறந்தது. இதையும் கண்டு தங்களுள் அடங்காத்துக்கத்தை யுடையவர்களாகித் தாய் தந்தையர் இருவரும் ஐயோ! முந்தியஜன்மத்தில் இப்படிக் குரூபிகளாகிய புத்திரர்களைப்பெறுவதற்கு என்ன பெரும்பாவங்களைச் செய்தோமோ, அப்பாவங்களைத்தொலைக்க எங்குசெல்வோம் எவ்விரதத்தை அனுஷ்டிப்போம் என்ன தானதருமங்களைச் செய்வோம் எப்படி நமக்கு நல்ல இலட்சணமுள்ள பிள்ளை எப்பொழுது உண்டாகுமென்று பரிதபித்துக்கொண்டிருக்கையில் அவர்கள் வம்ச குருவாகிய சாண்டில்லியர் தற்செயலாய் அவ்விடம் எழுந்தருளினர். இம்முனிவர் முக்காலங்களையும் நன்கு உணரும் திறமையுடையர். மிக்க அறிவுடையர் இலவரசனுக்குக் குலகுருவாய் இருப்பவர் ஆதலால்இவரைக் கண்டவுடன் தன் மனைவியோடெழுந்து எதிர்கொண்டு வணங்கி அழைத்துவந்து நல்ல ஆசனத்தில் எழுந்தருளப் பண்ணி அர்க்கியபாத்திய ஆசமனாதிபதினாறுவிதமான உப


சாரங்களால் தெய்பத்தைப்போல எண்ணிப்பூசித்து, சாஷ்
டாங்கமாக நமஸ்காரம்செய்து எழுந்துஇரண்டு கரங்களையும்
சிரத்தில் குவித்து நின்று இருகண்களாலும் ஆநந்தக் கண்
ணீரைத் தாரைதாரையாக விடுத்து என் ஆண்டவனே நாங்
கள் முன் ஜன்மங்களில் செய்திருந்த நல்வினையாலே தங்களைக்
காணப்பெற்றோம். ஆதலால் நாங்கள் தன்யர்களாகவும் தங்கள்
அநுக்கிரகத்தைப் பெற்ற யோக்கியர்களாகவும் பாபபரிசுத்
தர்களாயும், இஷ்டலாபத்தைப் பெற்றவர்களாயும் ஆகின்
றோம். எங்கள் மனதாகிய வண்டுகள் தங்கள் திருவடித்தாம
ரைகளினின்றும் நீங்காமல் அங்கேயே குடிகொண்டன எங்க
ளுக்குச் சமானமானவர்கள் இவ்வுலகத்திலொருவருமில்லை.
தங்களுடைய கிருபாகடாக்ஷவீக்ஷண்யத்திற்குப் பாத்திராக
விருக்கின்றோம். எங்கு-குருவின் தரிசனத்தினால் எவ்வித
மான புண்ணியம் உண்டாகின்றனவோ அவற்றிற்குச் சரியான
புண்ணியம் உலகத்திலுண்டோ; எந்நாளில் குருதரிசனம்
கிடைக்கின்றதோ அந்நாளே எந்நாளிலும் நன்னாளாகும். கட
வுளுக்கும் குருவிற்கும் வித்தியாசம் யாதொன்றில் கடவுள்
அசையாத அர்ச்சாரூபத்தை யுடையவர் குருவோ இடத்திற்
கிடம் செல்லும் தன்மையுடையவராம் ஆதலால் எங்கள் குல
தெய்வமாகிய தாங்கள் மனதிலுள்ள நீங்காக்குறையை நீக்கி
யருளவேண்டும் உலகத்திலுள்ள நல்லார் பொல்லார் எல்லா
ராலும் நிந்திக்கத்தக்ககுரூபியாயும் அங்கஹீனமான பிள்ளை
எங்களுக்குண்டாயிருக்கிறது, அது எப்பாதகத்தாலோ தெரி
வில்லை எங்களுக்கு நல்ல இலக்ஷணங்களையுடைய பிள்ளை
பிறக்க அநுக்கிரகம் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்த
னர். இதற்குச் செவிசாய்த்த குரு சிறிதுநேரம் தியானத்தி
லிருந்து கண்விழித்துக் கருணைபெருக அரசனை நோக்கி,
நரேந்திரா உனக்கு அங்கஹீனமான புதல்வன் உண்டாவ
தற்குக் காரணம் நீ முந்தியபிறப்பில் செய்த தீவினையே முற்
பிறப்பில் அதிகபலவானான ஒரு அரசன் பிரமன் பாகுவில்
பிறந்த க்ஷத்திரியவம்சத்தோன். பலம் அதிகமாயிருக்கிற
மமதையாலே நீ வீட்டு வாயிற்படிக்குப் படிகட்டி கட்டுவதற்
கார்க் சிலையில் அடித்து பிரதிஷ்டை பண்ணிய நாகங்களை

உடைத்து அவற்றைக்கொண்டே படிகட்டுகளைக் கட்டினாய் அரண்மனைப் பார்ப்பாரெல்லாம் அதைத் தீச்செயலென மிகுந்த கிரமத்தோடு உனக்குத்தெரிவித்து மறுக்க, நீ அதை மிகுந்த வருத்தத்தோடு ஒப்புக்கொண்டு வேறுகற்களால் படியைக்கட்டினது மன்றி நாங்கள் சிலையிற்செய்து அவற்றைப் பிரதிட்டையுஞ் செய்தாய் அப்படிச் செய்தும் அவைகளை உடைத்த தோஷத்தால் உனக்குக் குரூபியாகிய பிள்ளை பிறந்தது இனி உனக்கு நல்ல பிள்ளையுண்டாவதற்கும் நல்லவழியிருக்கிறது அதைச் சொல்வேன் செவ்வையாய்க்கேள். இந்த க்ஷேத்திரத்திற்கு நேர் தெற்கே கும்பகோணமென்றொரு தலமுளது அது உத்தமமான தலங்களுக்கெல்லாம் உத்தமமானது, அத்தலம் சிவன் விஷ்ணு முதலிய தேவர்களுக்கு அதிகப்பிரீதியைத் தரக்கூடியது. அதில் மகா தீர்த்தமென்றொரு தீர்த்தமுடைத்து. அதில் 12-வருஷத்திற்கொருமுறை குரு சிம்மராசியிலும் சூரியன் கும்பவிராசியிலும் நிற்கச் சந்திரன் குருவுடன்சேரும் காலமாகியமகாமகதினத்தில் நீராடுகிறவர்கள் தங்கள் இஷ்டத்தை அடைகிறார்களாகையால் அந்தமகாமகம் உங்களுடைய நல்வினையால் சமீபத்தில் வருகிறபடியால் நீங்கள் இருவரும் அவ்விடஞ்சேர்ந்து நீராடி ஆராவமுதனுக்கும் கும்ப இலிங்கேசருக்கும் உற்சவம் செய்வித்து தீர்த்தத்தில் நீராடிப்பல தான தருமங்கள் செய்தால் உங்களுக்கு எல்லாராலும் புகழத்தக்க நல்ல பிள்ளையுண்டாவதற்குச் சந்தேகமேயில்லை. நீங்கள்போய் தடாகத்தில் நீராடி அரசமரம் வலம்வந்து அந்நிழலிலிருந்து அடியில் வருமாறு தானம்செய்யவேண்டியது அவையாவையெனில் அரசமரத்தின் அடியில் இருந்து பிராமணர்களைச் செவ்வையாகப் பூஜித்து (1) கல்பவிருக்ஷதானமும், (2) சர்க்கரை சேர்த்துப் பிடித்த எள்ளுண்டை பதினென்றும் (3) வெண்ணெய்யால் செய்த இலிங்கதானமும் விதிப்படி செய்யவேண்டியவைகளாம் என்று சொல்லிய குருவின் வாசகமாகிய அமுதத்தைச் செவியாரப்பருகிமிக்க ஆனந்தக்கடலில் ஆழ்ந்து அவரை வணங்கி வழிபட்டு அவரையனுப்பியபிறகு தான் தனது பெண்சாதியோடும் பரிவா

ரங்களோடும் கும்பகோணக்ஷேத்திரத்திற்கு மாமக வுற்சவத்திற்குச் சென்று உத்தமசாமியாய் எழுந்தருளியிராநின்ற ஆராவமுதனுக்கும், கும்பலிங்கேசருக்கும் உத்ஸவம் நடப்பித்துக் கடைநாளில் தீர்த்தங்களில் ஆரோக்கியமும் செய்தபின், பிறகு மகாதீர்த்தத்தில் மகாமகத்திற்காக நீராடிப் புண்டரம் தரித்து நல்லுடையுடுத்து அரசமரத்தினடிக்குவந்து பிராமணர்களைப் பூசித்து வணங்கிக் கற்பகவிருட்சதானமும் இரத்தினத்தை இடையிற் புதைத்த வெண்ணெயால் செய்த இலிங்கம் தானமும் பிராமணர்களுக்கு செய்து வெல்லம் சேர்த்து எள்ளை உருண்டையாகப்பிடித்து அதில் பதினொன்றைப் பிராமணர்களுக்குகொடுத்து நிரம்ப அன்னதானம் செய்தான் பிறகு சாரங்கபாணிக்கும் இலிங்கேசருக்கும் அர்ச்சனை செய்வித்து அத்தலத்திலேயே க்ஷேத்திரவாசம் செய்துகொண்டிருக்கையில் அவன் மனைவி கருப்பமுற்று அதிக சுந்தரமான ஓர் ஆண்மகவைப்பெற்றனள் பிறகு சிறிதுநாட்கள் சென்றபின், தன் பரிவாரங்களுடன் தனது தேசத்திற்குத் திரும்பிச்சென்று சிலகாலம் அரசு புரிந்து பிறகு தன்மகனை அரசனாக்கி அவனுக்கு முடிசூட்டி, இராச்சியத்தை அவனிடத்திலொப்புவித்துத் தான் மனைவியுடன் குடந்தைசென்று ஆராவமுதன் சந்நிதியையும், கும்பேசர் தனியையும் திருப்பணி செய்வித்துப் புதுப்பித்து பொற்றாமரை மகாமக தீர்த்தம் இரண்டிற்கும் படிக்கட்டுக் கட்டுவித்து அவற்றைச்சுற்றிலும் வீடுகள் அமைப்பித்துப் பிராமணர்களுக்குத் தானம்செய்து அங்கேயே சவுக்கியமாகத் தனதுவாழ்நாளைக் கழித்துக்கொண்டிருந்தான். ஆகையால் நல்லபிள்ளையைப் பெற விரும்புவோர் இந்நீராடுவதுமுக்கியம்.

இப்படியாக மஹாமஹத்தின் பெருமையையும் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வதால் உண்டாகும் பலனையும் சொன்னோம். எல்லாருக்கும் இதன் மகிமை தெரியவேண்டுமென்னும் பேரவாவினால் இப்புத்தகத்தை எழுதி முடித்தோம். இதை வாசிப்பதனால் உண்டாகும் பலனை நாம் கூற வேண்டாம். அன்பர்களே தெரிந்துகொள்ளுவார்கள். சுபம்.

# மாமாங்க தீர்த்தம்




கா. முனிசாமி முதலியார் அண்டு சன்
14, டேவிட்சன் தெரு
மதராஸ்